264யா/ச/6291திருமதி. சரஸ்வதியம்மா பாலசந்திரவிநாயகர்
265யா/ச/6310திரு. வீரப்பு வே. ப்பிள்ளை
266யா/ச/6330திருமதி. நல்லம் பாலகிருஸ்ணன்
267யா/ச/6387திரு. தம்பையா வகாராளன்
268யா/ச/6474திரு. புன்னாலை அ லிங்கம்
269யா/ச/6570திருமதி. ஞானரத்தி சிவகுரு
270யா/ச/6578திருமதி. சின்னத்தங்க ார்த்திகேசு
271யா/ச/6611திரு. முத்துக்குமாரு கிருஷ்ணபிள்ளை
272யா/ச/6626திருமதி. வேதநாயகம் கந்தையா
273யா/ச/6669திருமதி. இரத்தினம் முதலியார்
274யா/ச/6731திருமதி. இராசாத்தியம்மா முருகுப்பிள்ளை
275யா/ச/6734திருமதி. சிவபாக்கியம் இரத்தினம்
276யா/ச/6740திரு. முத்துக்குமாரு இராமலிங்கம்
277யா/ச/6771திருமதி. கையிலாயவதி சோதிநாதன்
278யா/ச/6788திருமதி. பரமேஸ்வரி வயிரமுத்தாபிள்ளை
279யா/ச/6802திரு. தம்பையா துரைராசா
280யா/ச/6809திருமதி. பரமேஸ்வரி கோவிந்தசாமி
281யா/ச/6819திருமதி. பார்வதி சரவணமுத்து
282யா/ச/6864திருமதி. நாகேஸ்வரியம்மா சச்சிதானந்ததாசன்
283யா/ச/6865திரு. இரத்தினசாமிஐயர் பாலசுப்பிரமணியஐயர்
284யா/ச/6877திரு. வயித்திலிங்கம் மகாலிங்கம்
285யா/ச/6879திரு. அருளம்பலம் சின்னத்தம்பி
286யா/ச/6880திருமதி. கதிரநாயகி வேலாயுதம்பிள்ளை
287யா/ச/6896திருமதி. சரஸ்வதி இராசரத்தினம்
288யா/ச/6905செல்வி. குணவதியம்மா நவரத்தினம்
289யா/ச/6914திரு. செல்லையா நவரட்ணம்
290யா/ச/6934திரு. தம்பையா கந்தையா
291யா/ச/6942திரு. மாதவர் கனகராசநாயகம்
292யா/ச/6954திருமதி. ஆசைப்பிள்ளை கந்தையா
293யா/ச/6969திரு. வேலுப்பிள்ளை நாகமணி
294யா/ச/7008திருமதி. பொன்னம்மா கந்தசாமி
295யா/ச/7011திருமதி. தங்கம்மா வேலாயுதம்
296யா/ச/7020திருமதி. கண்மணியம்மா வேலுப்பிள்ளை
297யா/ச/7022திருமதி. செல்லம்மா வைத்திலிங்கம்
298யா/ச/7032திருமதி. சிவகாமன் செல்லத்துரை
299யா/ச/7035திருமதி. தங்கம்மா பொன்னம்பலம்
300யா/ச/7040திரு. வல்லிபுரம் கதிரவேலு
301யா/ச/7046திரு. பொன்னம்பலம் இராசதுரை
302யா/ச/7050திரு. செல்லப்பா தம்பிரத்தினம்
303யா/ச/7086திரு. நாகேசு குழந்தைவேலு
304யா/ச/7093திருமதி. இரத்தினேஸ்வரி வீரசிங்கம்
305யா/ச/7096திரு. இளையதம்பி சின்னத்துரை

# நெடுங்கேணி சுற்றயல் கூறு வைத்தியசாலையில்
# நிரந்தர வைத்தியர் இன்மையால் மக்கள் அவதி

(அலுவலக செய்தியாளர்)

**நெடுங்கேணி சுற்றயல் கூறு வைத்தியசாலையில் நிரந்தரமான வைத்தியர் இல்லாததால் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறவேண்டிய நோயாளர்கள் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கோ அல்லது வவுனியா வைத்தியசாலைக்கோ செல்லவேண்டியுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

மேற்படி வைத்தியசாலையில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு அவை திறந்துவைக்கப்பட்ட நிலையிலும் நிரந்தர வைத்தியர் ஒருவர் இல்லாத காரணத்தினால் விடுதிகள் வெறுமனவே காட்சியளிக்கின்றன.

புதிதாக கட்டப்பட்ட ஆண்கள் விடுதி , பெண்கள் விடுதி, பிரசவ விடுதி என்பன நோயாளர் இன்றி காணப்படுகின்றன. இங்கு தங்கி நின்று நோயினைக் குணப்படுத்த வேண்டிய நோயாளிகள் வைத்தியர் இல்லாத பட்சத்தில் நீண்ட தூரங்களுக்கு அப்பால் உள்ள வவுனியா அல்லது புதுக்குடியிருப்பு வைத்திய சாலைகளுக்குச் சென்று தங்கி நிற்கவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அத்துடன் நாளாந்தம் வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்களும் வைத்தியர் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். அத்தோடு ஜயசிக்குறு நடவடிக்கை முறியடிக்கப்பட்டு இப்பிர தேசம் மீட்டெடுக்கப்பட்ட காலத்திலிருந்து இந்த வைத்தியசாலைக்கு இன்று வரை நிரந்தரவைத்தியர் ஒருவரும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.(கு,தீ)

# தமிழீழ காவல்துறையினரின்
# பாதசாரிகளுக்கான வேண்டுகோள்

பாத்சாரிகளாகிய நீங்கள் உங்கள் அன்றாட தேவைகளை நிறைவு செய்வதற்காக வீதிகளைப் பாவித்து வருகின்றீர்கள். வீதிகளைப் பாவிப்பதற்கு சில விதிமுறைகள் உள்ளன. இவற்றைப் பின் பற்றி வீதிகளைப் பாவிக்குமாறும், விபத்திலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு எம்மால் அறிவுறுத்தப்படும் விடயங்களைக் கடைப்பிடித்து நடக்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நீங்கள் வீதியில் நடக்கும் போது வீதியின் வலது பக்கமாக நடந்து செல்லுதல் வேண்டும்.

வீதியில் நடந்து செல்லும் போது ஒருவருக்குப் பின் ஒருவராக நடந்து செல்லுதல் வேண்டும்

பாதசாரிக் கடவை அல்லது நடைபாதை இருந்தால் அவ்விடத்தில் இருவருக்கு மேல் பக்கம் பக்கமாக நடந்து செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

வீதியைக் கடந்து செல்ல வேண்டுமாயின் பாதசாரிக்கடவையைப் பாவித்துக் கடந்து செலலுதல் வேண்டும். வளைவு நெளிவான இடங்களிலும், சந்திகளிலும் வீதியைக் கடந்து செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

பாதசாரிக் கடவைகள் இல்லாத விடத்து வீதியைக் கடந்து செல்ல வேண்டுமாயின் வாகன போக்குவரத்து நிலை பற்றி தெளிவாகத் தெரிந்து கொண்ட பின் வலம் பார்த்து, இடம் பார்த்து, திரும்பவும் வலம் பார்த்து விரைவாகக் கடந்து செல்லுதல் வேண்டும்.

நிறுத்தப்பட்டிருக்கும் வாகனம் ஒன்றின் பின்னே அல்லது முன்னே கடந்து செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இரவில் நீங்கள் வீதியில் நடந்து செல்லும்போது மென்னிற ஆடை அணிந்து செல்லுங்கள் அல்லது ஏதாவது ஒரு வெள்ளைப் பொருள் உங்கள் கையில் கொண்டு செல்லுதல் வேண்டும். ஏனெனில் வாகன சாரதிகள் தூரத்தில் நீங்கள் வருவதைக் கண்டு கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். இவற்றைக் கடைப்பிடித்து நடக்குமாறு தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப் பாளர் பாதசாரிகளுக்கு வேண்டு கோள் விடுத்துள்ளார்.

# சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப்படைப்பிரிவு
# இரண்டாம் கட்ட சமூக நலப்பயிற்சிநெறி

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் கல்வித்திணைக் களத்துடன் இணைந்து சுகாதாரத்திணைக்களத்தினூடாக ஏ.எஸ்.பி. நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடாத்தப்படும் சமூக நலப்பயிற்சி நெறியில்இரண்டாம் கட்ட சமூகநலப்பயிற்சி நெறி 30.10.2004 அன்று முழங்காவில் மகாவித்தியாலயத்தில் சிறப்பாக நடாத்தப்பட்டது.

இப் பயிற்சி நெறியில் இப்பாடசாலையில் இருந்து 30 இற்கு மேற்பட்ட மாணவர்களும், பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்களும் கலந்து கொண்டனர். மேலும் இப் பயிற்சி நெறியில் முதலுதவி, உடல் அமைப்பு தொழிற்பாடும் முதலுதவிச் செய்முறைகள், தொற்று நோய்கள் , சுகாதார நடைமுறைகள் தொடர்பாக பல விரிவுரைகள் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு ஆணையாளர், திட்ட இணைப்பாளர், தலைவர் தொண்டர்கள், ஆகியோராலும் சுகாதாரத்திணைக்களப் பிரதிநிதிகளாலும் வழங்கப்பட்டது.

இப் பயிற்சி நெறியில்முதலுதவி தொடர்பான கைநூல் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் தயாரிக்கப்பட்டு பயிற்சியில் பங்குபற்றிய ஒவ்வொரு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன. மேலும் பயிற்சியை நிறைவு செய்த ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் முதலுதவிப் பெட்டிகளும், அதற்கான மருந்துகள், உபகரணங்களும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினரால் இத்திட்டத்தில் வழங்கப்பட்டதோடு இப் பாடசாலையில் பயிற்சி நெறியை நிறைவு செய்த மாணவர்களிடையே பாடசாலை மட்டத்தில் முதலுதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டதோடு, பயிற்சியின் நிறைவில் பரீட்சையும், சான்றிதழ், சின்னங்கள் வழங்கும் ஒழுங்கும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் செய்யப்பட்டுள்ளது.



சிறிலங்காவின் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் உள்ளிட்ட உலக உணவுத்திட்ட பிரதிநிதிகள் பூநகரியில் உலக உணவுத் திட்ட வேலைத்திட்டங்களை பார்வையிடச் சென்றபோது பாடசாலை மாணவர்களால் வரவேற்கப்படும் காட்சி.

வவுனியா வடக்குப் பகுதியில்

# 15 பொதுநோக்கு மண்டபங்களை விரைவில் திறந்து வைக்க ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேசசபைக்கு உட்பட்ட 15இற்கும் மேற்பட்ட கிராமங்களில் அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபங்கள் அனைத்தும் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் திறக்க ஏற்பாடு செய்துள்ளதாக பிரதேசச் செயலர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் மருதோடை, நொச்சிக்குளம், பட்டறை பிரிந்தகுளம், கற்குளம், ஒலுமடு, வேலன்குளம், ஆயிலடி, மாமடு, மதியாமடு, பழையவாடி, புதூர், பட்டிக்குடியிருப்பு, புளியங்குளம் தெற்கு, கனகராயன் குளம் வடக்கு, கனகராயன்குளம் தெற்கு, சின்னப்புவரசங்குளம், ஊஞ்சல் கட்டி, புதுவிளான் குளம் ஆகிய கிராமங்களில் உள்ள பொது நோக்கு மண்டபங்களே திறப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைவாக எஞ்சியுள்ள வேலைகளை விரைவாக முடித்து வைக்குமாறு ஒப்பந்தக்காரரை நெடுங்கேணிப்பிரதேசசெயலர் கேட்டுக்கொண்டுள்ளார். (கு,தீ)

# கனகராயன் குளம் ம.வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறையால் நெருக்கடி

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா வடக்கு கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக குறையால் அதிபர் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாக கவலை தெரிவித் துள்ளார்.மேற்படி பாடசாலைக்கு மொத்தம் 26 ஆசிரியர்கள் தேவைப் பட்ட போதிலும் தற்போது 16 ஆசிரியர்களே கடமையாற்றி வருகிறார்கள். இவர்களில் ஐந்தாம வகுப்பிற்கு கீழ்ப்பட்ட மாணவர்களுக்கு 5ஆசிரியர்கள் தேவைப் பட்ட போதிலும் தற்போது 2ஆசிரியர்களே உள்ளனர்.இதனால் ஆசிரியர்களுக்கும் பெரும் சிரமம் ஏற்படுவதோடு மாணவர்களின் கல்வியும் சீராகத் தொடரமுடியாது இருப்பதாகப் பாடசாலை முதல்வா கவலை தெரிவித்துள்ளார். (கு.தீ)

# பன்னங்கண்டி மருதநகர்ப் பகுதியில் பன்றி தாக்கி இளைஞன் படுகாயம்

(வட்டக்கச்சி)

பன்னங்கண்டி மருதநகர்ப்பகுதியில் வேட்டையாடிய பன்றி வேட்டைக்காரனையே தாக்கியது. இச் சம்பவமானது கடந்த ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது. வழமையாக தனது நாயுடன் வேட்டையாடச் சென்ற இளைஞன் பன்றியை வேட்டை யாடிய போது பன்றி பெருத்த காயத்துடன் வேட்டையாடிய நபர் ராசன் (வயது 35) என்பவரைக் கையில்கடித்துகுதறியது. இதேவேளை அவருடன் உதவிக்குச் சென்ற வேட்டை நாய் பன்றி யினைப்பிடித்தது. உடனே அயலவரின் உதவியுடன் பன்றியினைக் கொன்று விட்டு காயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (12)

# மாவீரர் நாள் நிகழ்வு குறித்து பாலிநகரில் ஆலோசனைக்கூட்டம்

(மல்லாவி)

பாண்டியன்குளம் பிரதேசத்தில் எதிர்வரும் மாவீராநாள் நிகழ்வை உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கும் நோக்குடன் மாவீரர் செயற்பாட்டு குழுத் தெரிவு பாலிநகர் அரசியல் துறை செயலகத்தில் நேற்று முன்தினம் முல்லை மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணை தலைமையில் இடம் பெற்றது நிகழ்வில் எதிர்வரும் மாவீரர் தினத்தை மிகவும் சிறப்புடன் முன்னெடுத்து செல்வதற்கான ஒழுங்குகள் திட்டமிடப்பட்டன. செயற்பாட்டுக் குழு வினர்கள் வர்த்தக சங்கத்தினர் துறைசார்ந்தவர்கள் மூலம் மாவீரர் ஈகங்களைச் சித்திரிக்கும் பதாகைகள் கட்டுதல் வீதி வளைவுகள் கட்டுதல் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு போன்ற ஒழுங்குகளை மேற்கொள்வது தொடர்பாகவும் சிரமதானப் பணிகள் போன்றன தொடர்பாகவும் கருத்துரைகளை பாண்டியம்குளம் பிரதேச அரசியலதுறைப் பொறுப் பாளர் சோ. வேங்கைமாறன் வர்த்தக சங்கத்தலைவர் பகீர் ஆகியோர் வழங்கினர். இந் நிகழ்வில் துறை சார்ந்த அமைப்புக்கள் வர்த்தக சங்கத்தினா எனப் பலரும்கலந்து கொணடனர் (24)

# போரூட் நிறுவன நிதியுதவியுடன் நெற்செய்கைக்கு உள்ளீடு வழங்கல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாவடி கிராம மக்களுக்கு கிளி/ கிழக்குபுனர் வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் போரூட் நிறுவன நிதியுதவியுடன் ஒன்றரை ஏக்கர் வயல் காலபோக நெற்செய்கைக் கான உள்ளீடுகளும், நிலத்தைப் பண் படுத்துவதற்கான உழவுப் பணமும கடந்த திங்கட்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் கிளி/ கிழக்குப் புனர்வாழ்வு நிறுவனத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகிறது. (12)

# மேலும் 15 அகதிகள் தாயகம் திரும்பினர்

இந்தியா தர்மபுரி பானையார் அகதி முகாமிலிருந்து மேலும் 15 அகதிகள் தலைமன் னாருக்கு வந்து சேர்ந்துள்ளனர். இவர்கள் பதிவுகள் எதையும் மேற்கொள்ளாது தமது சுய விருப்புடன் சொந்த இடங்களுக்குச் சென்றுள்ளனர். இவர்களில் 7 ஆண்களும், 8 பெண்களும் அடங்குவர். இவாகள் மன்னார், வவுனியா, செட்டிகுளம பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மருத்துவ பரிசோதனைக்குப் பின் கிராம சேவகரின பதிவுகளுக்குட்படுத்தப்பட்டனர்.(மி)

# பூநகரி வெற்றி விழாவை முன்னிட்டு மாணவரிடையே பொது அறிவுப்போட்டி

பூநகரி வெற்றி விழாவை முன்னிட்டு பொது அறிவுப் போட்டி எதிர்வரும் 13ஆம் திகதி பூநகரி வாடியடியில் நடைபெற இருக்கும் பூநகரி வெற்றி விழாவை முன்னிட்டு பூநகரிக் கோட்டப் பாடசாலைகளிற்கு இடையே 6தொடக்கம் 13ஆம் தரம் வரையிலான மாணவர்களிற்கான பொது அறிவுப் போட்டி நடைபெறவுள்ளது.இதற்கான ஏற்பாடுகளை மாணவர் அமைப்பினரும், மேற்கொண் டுள்ளனர். 1993 ஆம் ஆண்டு பூநகரி படைத்தளம் விடுதலைப்புலிகளின் தவளைத் தாக்குதல் நடவடிக்கை மூலம் தாக்கியழிக்கப்பட டது தெரிந்ததே. (34)

# மது அருந்திவிட்டு உறங்கியவர் இறந்த நிலையில் மீட்கப்பட்டார்

(மன்னார்)

மன்னார் பேசாலை மதுபான நிலையத்தில் குடும்பஸ்தர் ஒருவா இறந்த நிலையில் காணப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை மது அருந்திய இவர் உறங்கிய நிலையில் இருந்ததாகவும் மறுநாள் காலை மதுபானவிற்பனையாளர் கடைக்குச் சென்றபோது இவர் இறந்து கிடக்ககாணப்பட்டார் எனவும் தெரியவருகிறது.இறந்தவர் மில்க்கி (வயது 37) என அடையாளம் காணப்பட்டது. (மி)

# மதுவரித் திணைக்கள தலைமையலுவலகத்தின் சட்டவிரோத செயலைத் தடுக்க வேண்டுகை!

## -யாழ்.அரச அதிபருக்கும் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டில் முறைகேடான விதத்தில் மதுபானசாலைகள் அமைக்கப்படுதல் மற்றும் சுற்றுச் சூழல் அமைவிடங்களின் தன்மையை கவனத்தில் கொள்ளாது மதுபானசாலைகளை நடத்துவதற்கான உரிமங்களை வழங்குவது போன்ற நடவடிக்கைகள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படல் வேண்டுமென மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான தமிழ்பேசும் மக்களின் அமையம் வலியுறுத்தியுள்ளது.**

யாழ்.மாவட்டத்தில் அமைந்துள்ள மதுவரித்திணைக்கள உதவி ஆணையாளர் மற்றும் அதிகாரிகளது சிபாரிசு இன்றி மதுவரித்திணைக்களத்தின் தலைமைக் காரியாலயத்தால் யாழ். குடாநாட்டில் மதுபானசாலைகளை அமைப்பதற்கான அனுமதிப் பத்திரங்களும் உரிமங்களும் நேரடியாகவே வழங்கப்படுகின்றன.

இதனால் மதுபானசாலைகள் அமைக்கப்படக் கூடாத இடங்களான பாடசாலைகள், வழிபாட்டுத்தலங்கள், சனசமூக நிலையங்கள், சிறுவர் இல்லங்கள் மற்றும் மக்கள் அதிகளவில் கூடும் பொதுஇடங்களில் எல்லாம் மதுபானசாலைகள் அமைக்கப்படுவதற்கு அனுமதி வழங்கப்படுவதால் பல கலாசார சீரழிவுகளும், சமூக வன்முறைகளும் இடம் பெறுகின்றன.எனவே உரிய சூழல் அமைவிடங்களைக் கவனத்தில் கொள்ளாது மதுவரித் திணைக்கள தலைமைக் காரியாலயத்தினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ள மனிதஉரிமைக்கும், அபிவிருத்திக்குமான தமிழ்பேசும் மக்களின் அமையம் சட்டத்துக்குப் புறம்பாக யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களத்தின் சிபாரிசுகள் இன்றி மதுவரித்திணைக்களத்தின் தலைமையகத்தால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுவது திட்டமிட்டுத் தமிழர் கலாசாரத்தை சீரழிக்கும் நடவடிக்கையேயெனச் சுட்டிக்காட்டி யாழ்.அரசஅதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. (33)

## வரணி பொது நூலகத்திற்கு அடிப்படை வசதிகள் தேவை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் உள்ள வரணி பொது நூலகம் அடிப்படை வசதிகள்அற்ற நிலையிலே இயங்கிவருகின்றது.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புக்கள் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மேற்படி நூலகத்திற்கு போதியளவு தளபாடவசதிகள் மற்றும் இட வசதிகள் என்பன காணப்படவில்லை. இதைவிட இங்குபயனுள்ள புத்தகங்கள், பத்திரிகைகள் என்பன இன்மையும் காணப்படுகின்றன.

இதனால் இந்நூலகம் ஊடாக மக்கள் பூரண பயனைப்பெற முடியாத நிலை காணப்படுகிறது. எனவே இதனைக் கவனத்தில் கொண்டு இந் நூலகத்திற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு பொதுஅமைப்புகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

## கால எல்லை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 2003/2004 கல்வி யாண்டுக்கான வெளிநிலைத் தேர்வு நாடியாக பதிவு செய்வதற்குரிய கால எல்லை 2004.11.15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.என துணைவேந்தர் அறியத்தந்துள்ளார். (36)

## கட்டடத் தொழில்சார் பயிற்சியளிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள இளம் கட்டடத் தொழிலாளர்கள் 810பேருக்கு தொழில்சார் பயிற்சிகளை வழங்க மூவிமென்டோ எனும் சர்வதேச தொண்டர் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் கட்டடத் தொழிலில் ஈடுபட்டு வருவோரில் கணிசமான அளவில் இளம் தொழிலாளர்கள் உள்ளனர். இவர்களுக்கு போதியபயிற்சிகள் இன்மையால் இவர்களது தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனைக் கருத்தில் கொண்டே மூவிமென்டோ நிறுவனம் பிரதேசசெயலர் பிரிவுகள் வாரியாக 810 கட்டடத் தொழிலாளர்களுக்குப் பயிற்சிகள் வழங்க நடவடிக்கை [illegible]த்துள்ளது. (33)

## கோகிலாக் கண்டிக் கடற்கரையில் ஆணின் சடலம் கரை ஒதுங்கியது

யாழ். தென்மராட்சியில் உள்ள கோகிலாக் கண்டிக்கடற்கரையில் ஆண்ஒருவரின் சடலம் கடந்த திங்கட் கிழமை இரவு கரை ஒதுங்கியுள்ளது.

இவ்வாறு கரைஒதுங்கிய சடலம் கைதடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அரசுமுனி (வயது 67) என்பவரது என நேற்று முன்தினம் பிற்பகல் அடையாளம் காணப்பட்டது.

மேற்படி சடலம் கரை ஒதுங்கியமை கண்டுபிடிக்கப்பட்டாலும் அதனை மீட்க முடியாது இரவாகிவிட்டதனாலும், இரவு நேரத்தில் கடற்கரை ஓரங்களில் நடமாடுவோர் மீது பாதுகாப்புக் கெடுபிடிகளைப் படையினர் விதித்து வருவதாலும் அதனை உடனடியாக மீட்க முடியாது போய்விட்டது.

இதனால் மறுநாளே இச்சடலம் மீட்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (33)

## மாவீரர் துயிலும் இல்லத்தில் பொது மக்கள் சிரமதானம்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் தமிழீழ மாவீரர் தினத்தையொட்டி கொடிகாமத்தில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லத்தை புனர்நிர்மாணம் செய்யும் பணிகள் மற்றும் சிரமதானப் பணிகள் பெரும் வேகத்துடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இப் பணிகளில் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் மிகுந்த அக்கறையுடனும் ஆர்வத்துடனும் மாவீரர் துயிலும்இல்லத்தை அழகுபடுத்தி வருவதுடன் ஆங்காங்கே வீதிகளில் மாவீரர் தினக் கொண்டாட்டங்கள் குறித்து பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தினம் தேசியவிடுதலையின் சீரிய நோக்கத்தை தன்னகத்தே கொண்டுள்ளதால் இத்தினம் குறித்து கருத்தூட்டல்களும் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (28)

### — பாலம் புனரமைப்பதற்காக —

## கைதடியில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீதியில் பயணிப்பது தடைப்படலாம்!

(தென்மராட்சி)

தென்மராட்சியில் உடைக்கப்பட்ட கைதடிப்பாலத்திற் கிடையே தற்காலிகமாக அமைக் கப்பட்ட பாதை குறித்து பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

தென்மராட்சி முகமாலையில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பிரதான சாலையிலுள்ள கைதடி பாலம் உடைக்கப்பட்டு தற்காலிக பாலம் அமைக்கப்பட்ட பின்னால் இப்பாதையில் பயணம் செய்யும் வாகனங்கள் பெரும் சிரமத்திற்கு மத்தியில் சென்று வருவதுடன் ஒருவழிப்பாதையாய் இருப்பதால் நீண்டநேரம் காத்துக்கிடந்து பயணம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு மத்தியில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட பாதையின் இருபுறங்களிலும் நீர் உயர்ந்து வருவதால் விரைவில் இப்பாதை பாவிக்க முடியாத நிலை ஏற்படுமென மக்கள் தெரிவிக்கின்றனர். தற்போது பெய்து வரும் மழை தொடர்ந்து நீடித்தால் இப்பாதையூடான போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

இப்பாதை குறித்த மக்களின் அச்சத்தை தென்மராட்சிப்பிரதேசச் செயலக வட்டாரங்கள், யாழ். அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளதாகத் தெரியவருகிறது. கனரக வாகனங்கள், பாரவூர்திகள் இப்பாதையூடாக பயணிப்பதற்குத் தடைகள் விதிக்கப்பட்ட போதிலும் இதை சம்பந்தப்பட்ட வாகன சாரதிகள் கவனத்தில் எடுக்கவில்லையென பிரதேசச் செயலக வட்டாரங்கள்தெரிவிக்கின்றன. (28)

## சந்தைக் கதவுகள் அடைக்கப்பட்டதால் வர்த்தகர்கள் திடீர் போராட்டம்

### -சாவகச்சேரியில் நேற்று பரபரப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி மரக்கறிச் சந்தைக்கு வரும் பிரதான இரண்டாவது கதவும், தேங்காய்ச் சந்தை பிரதான கதவும் அடைக்கப்பட்டதால் வர்த்தகர்கள் திடீர் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

சாவகச்சேரி வர்த்தக சங்கத்தில் இருந்து வர்த்தக சங்கத் தலைவர் மருத்துவர் அருளானந்தம் தலைமையில் வர்த்தகர்களும் மரக்கறி வியாபாரிகளும் திடீர் என ஊர்வலமாக புறப்பட்டு காலை 10.05 மணியளவில் நகரசபை செயலாளரிடம் தங்களது ஆட்சேபத்தை தெரிவித்ததை அடுத்து சில மணி நேரத்தினுள் பாதைகள் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நகரசபை செயலாளர் கொடுத்த உறுதிமொழிகளை அடுத்து கடந்த முதலாம் திகதி முதல் மரக்கறிச் சந்தை தனது பழைய இடத்தில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இப்போராட்டத்தினால் காலை சாவகச்சேரி மரக்கறிச் சந்தைப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது. (28)

## நலன்புரி நிலைய மாணவர்களுக்கு பரீட்சை வழிகாட்டல் நூல்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் வறியமாணவர்களுடைய நன்மை கருதி யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தினரால் பரீட்சை வழி காட்டல் நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் குடா நாட்டில் உள்ள இடம்பெயர்ந் தோர் நலன்புரிமுகாமகளில் வாழும் மாணவர்களில் எதிர்வரும் கல்வி பொதுத்தராதர சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் களுக்கான ஒரு தொகுதி பரீட்சை வழிகாட்டல்நூல்கள் வழங்கப் பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட தமிழ்மாணவர் ஒன்றியத்தின் ஊடக இணைப்பாளர் யெ.கோகிலநாத் தெரிவித்தார். (33)

## மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.எழுவைதீவு பிரதேச வாழ் மீனவர்களின் தொழில்துறை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான உதவிகளை வழங்க பிரிட்டன் அரசு முன்வந்துள்ளது.

இதனடிப்படையில் எழுவைதீவுப்பிரதேசத்தில் வாழ்ந்து வரும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மீனவர்கள் 42 பேருக்கு மீன்பிடி உபகரணங்களை பிரிட்டன் வழங்கியுள்ளது.

இராணுவ ஆக்கிரமிப்புக்கள் மற்றும் இடப் பெயர்வுகளால் பாதிக்கப்பட்டு பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிப் போயுள்ள இப்பகுதி மீனவர்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காகவே இவ் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (33)

## கசிப்பு உற்பத்தித் தொழிற்சாலையை கவனத்திற் கொள்ள வேண்டுகை

சரசாலை மத்திய சனசமூக நிலைய எல்லைக்குட்பட்ட கல்லுமுனைக் குறிச்சி கூனிக்கிராய்க் குளந்தை அண்டிய பகுதிகளில் பா[illegible]அளவில் கசிப்பு உற்பத்தித தொழிற்சாலை இயங்கி வருவதாக மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் முறைப்பாடு செய்திருப்பதாகத் தெரியவருகிறது. இங்கு உற்பத்தியாகும் கசிப்பு தென்மராட்சியின் சில பகுதிகளுக்கு விற்பனைக்கு கடத்திச் செல்லப்படுவதாகவும் இப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (28)

அரசாங்கம் அரசியல் யாப்பில் அவசர அவசரமாகத் திருத்தங்கள் செய்யப் போகின்றதென்று ஐக்கிய தேசியக் கட்சி கருத்து வெளியிட்டுள்ளது. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு அதிக பெரும்பான்மைப் பலம் இல்லாமல் யாப்பில் திருத்தங்கள் கொண்டு வரமுடியாதென சமீபத்தில் ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல் பீரிஸ் கருத்து வெளியிட்டுள்ளார்.

அரசியல் யாப்பை திருத்துவதற்கு இவ் வருடத்தில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுமென சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்ட பின் இக் கருத்தினை பேராசிரியர் பீரிஸ் வெளியிட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணி ஆட்சி பீடம் ஏறியதும் அரசியல் யாப்பு மாற்றச் சபையை அமைத்து அதன் மூலம் யாப்பினை மாற்றியமைப்போம் என மக்களுக்குக் கூறி உள்ளதை எவராலும் மறக்க முடியாது. அதற்கு ஐக்கிய தேசிய முன்னணி எதிர்ப்புத் தெரிவித்தது தற்பொழுது அரசியல் யாப்பில் திருத்தங்கள் கொண்டு வர முடியாவிட்டாலும் அதன் அவசியம் பற்றி ஏன் இப்பொழுது கூறுகின்றனர். இந்த யாப்பை நாட்டுக்கு கொண்டு வந்த அல்லது விகிதாசார தேர்தல் முறையில் மாற்றங்கள் கொண்டு வருவதையோ விரும்பவில்லை. விகிதாசார தேர்தல் முறையால் சிறுபான்மை கட்சியினருக்கு அதிக நன்மைகள் ஏற்படுவதால் அவர்கள் யாப்பைத் திருத்தவோ விகிதாசார தேர்தல் முறையை மாற்றியமைக்கவோ விரும்ப மாட்டார்கள்.

இந்த நாட்டின் அரசியல் தலைவர்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் பலம் சிறுபான்மை கட்சியினரிடமே உள்ளது. இவர்கள் சிறுபான்மையாக இருந்தாலும் நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கும் பெரும் சக்தியாக விளங்குகின்றனர்.

அரசியல் யாப்பு மசோதாவை திருத்தும் பொழுது முக்கியமாக இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகன வழிகளை இனம் காணுதல் மிக அவசியமாகும். இதற்கு முன்னதாக எதிர்க்கட்சி- முஸ்லிம் காங்கிரஸ்-ஜே.வி.பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒரு இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும். இதில் தனித்தரப்பு அல்லது ஒட்டுமொத்தமாக இணக்கம் காண்பதில் சிக்கல்கள் ஏற்பட்டால் சமூகத்தில் பல பிரச்சினைகள் தோன்றும். ஆகவே ஒட்டு மொத்தமாக எதிர்க்கட்சியினர் ஏற்றுக் கொள்ளும் திட்டத்தை முன் வைக்க தீர்வுகளை எட்டும் பொழுது அவை தோல்வி ஏற்பட்டு மீண்டும் யுத்தம் ஒன்று நாட்டில் ஏற்பட்டால் கோடிக்கணக்கை செலவழித்து ஏற்படுத்திய பேச்சு வார்த்தைகள் மீண்டும் அழிவை நோக்கித் தள்ளப்படும். ஆகவே சாதாரண நிலைக்கு பேச்சுவார்த்தைகள் வந்த பிறகு இறுதித் தீர்வுக்கு பேச்சு வார்த்தைகளை பற்றி கலந்தாலோசிக்கும் புலிகளின் கூற்றை வரவேற்காமல் இருக்க முடியாது. வடகிழக்கு புனரமைப்பு வேலைகள் தனது கட்டுப்பாட்டின் கீழ் இயங்க வேண்டும் என்பதே புலிகளின் நிலைப்பாடு.

வடகிழக்கு நிர்வாகம் சம்பந்தமாகவே அரசுடன் புலிகள் மோதலில் ஈடுபட்டுள்ளனர். புனரமைப்பு வேலைகள் ஒரு பகுதியினருக்கு வழங்குவது எப்படி. ஆனால் அரசாங்கம் எந்த அடிப்படையில் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை கையளிக்கும். அதாவது இடைக்கால நிர்வாகம் என்பது இரண்டு நிர்வாகங்களுக்கிடையில் ஏற்படும் ஒப்பந்தமாகும். தற்போதைய அரசின் யாப்பின் கீழ் இயங்கும் நிர்வாகம், மற்றது விபரம் குறிப்பிடாத நிர்வாகம் இவை இரண்டிற்கும் இடை காணாமல் இடைக்கால நிர்வாகத்தை அரசு எந்த அடிப்படையில் புலிகளிடம் கையளிக்கப் போகிறது? விடுதலைப்புலிகளால் முன் வைக்கப் பற்றிய பின் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு நோர்வே அரசு விடுத்த வேண்டுகோளுக்கு தற்போதைய அரசு உள் ஒன்றும், புறம்ஒன்றும் பேசுகின்றமையால் சமாதானத்திற்கு ஒத்துழைப்பு வழங்க முடியாதென ஐக்கிய தேசியக்கட்சி பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பின்னர் விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகத்திட்டவரைவை முழுமையாக ஏற்றுப்பேச்சுவார்த்தைகள் நடத்த முடியாதென சனாதிபதி சந்திரிகா கூறிய பொழுது புலிகளின் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக உடன் பேச்சுவார்த்தைகளை நடத்துமாறு எதிர்க்கட்சித்தலைவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை ஆளும் கட்சி அரசியல் யாப்பு நிறைவேற்றுச்சபையின் அதிகாரங்கள் சம்பந்தமாக அரசியல் யாப்பில் எதுவும் குறிப்பிடவில்லை. அரசியல் யாப்பில் இல்லாததை எப்படி இவர்கள் சட்ட பூர்வமாகப் போகிறார்கள் என்பதைப்பற்றி எந்த விளக்கங்களையும் அரசாங்கம் முன் வைக்கவில்லை.

பாராளுமன்றத்தில் அங்கீகாரம் பெறாமல் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் யாப்பைத்திருத்துவதற்கு எந்த அதிகாரமும்


# அரசியலமைப்புச் சபையின் அதிகாரங்கள் குறித்து அரசியல் யாப்பில் எதுவுமில்லை

பெருமை ஐக்கிய தேசியக் கட்சியையே சாரும். 1978 ஆம் ஆண்டு தொடக்கம் 1998ஆம் ஆண்டு வரை 16 தடவைகள் அரசியல் யாப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படடுள்ளன. அக்காலத்தில் இந்த யாப்பை சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் (எதிர்க்கட்சியாக இருந்தபொழுது) நாட்டை அழிக்கும் காவியம் என வர்ணித்தனர். இப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியினரும், அன்றைய சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் இந்த யாப்பில் சிறுமாற்றங்கள் மேற் கொள்ளாமல் முழுமையாக மாற்றியமைக்கும் படி வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

1994ஆம் ஆண்டு சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி இந்த யாப்பை மாற்றி அமைப்பதை விட புதிய யாப்பொன்றை இந்த நாட்டிற்குத் தயாரிக்க வேண்டும் எனக் கூறியது. அதன் படி இந்த அரசியல் யாப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பது கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகக் கருதப்படுகின்றது.

மூன்று விடயங்களை நாங்கள் முக்கியமாகக் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை மாற்றியமைத்தல், இரண்டாவது தேர்தல் நடைமுறையில் மாற்றங்களைக் கொண்டு வருதல், மூன்றாவது நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் இவற்றுக்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் சரியான பதில்களைக் கூறவில்லை. அவர்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை மாற்றியமைக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. ஆனால் இப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியினர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையில் திருத்தங்களைக் கொண்டு வரவேண்டுமென கூறுகின்றனர். ஆனால் முஸ்லிம் காங்கிரசும் வேறு சில கட்சிகளும் சனாதிபதி முறையை மாற்றியமைப்பதையோ வேண்டும். விடுதலைப்புலிகளுடன் அரசு பேச்சு வார்த்தைகள் நடத்தும் அதேவேளை ஏனைய எதிர்த் தரப்பினர்களுடனும் பேச்சு வார்த்தைகளை அரசு நடத்தினால் அவர்களை இணக்கப்பாட்டுக்குக் கொண்டு வருவதுடன் பேச்சுவார்த்தைகளின் வெற்றிக்கு அரசினால் வழி வகுக்க முடியும். இதனால் சனாதிபதியின் சமாதானப் பேரவையின் முக்கியம் இங்கு தெளிவாகத் தெரிகின்றது.

விடுதலைப்புலிகளுடன் அரசு பேச்சு வார்த்தைகள் நடத்தும் அதேவேளை ஏனைய எதிர்த்தரப்பினர்களுடனும் பேச்சு வார்த்தைகளை அரசு நடத்தினால் அவர்களை இணக்கப்பாட்டுக்கு கொண்டு வருவதுடன் பேச்சுவார்த்தைகளின் வெற்றிக்கு அரசினால் வழி வகுக்க முடியும். இதனால் சனாதிபதியின் சமாதானப் பேரவையின் முக்கியம் இங்கு தெளிவாகத் தெரிகின்றது. ஆகவே இந்த சபையில் எதிர்க்கட்சி பங்கேற்காவிடில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் யாவும் கேள்விக்குறியாகவே அமையும். இப்பொழுது சமாதானப் பேச்சு வார்த்தையில் இருந்து கொண்டு குப்பையை கோழி கிளறுவதற்கு சமமாகவுள்ளது.மறுபுறம் விடுதலைப்புலிகள் இடைக் கால நிர்வாகம் சம்பந்தமாகக் கருத்துக்களை முன்வைத்துள்ளமையால் அரசாங்கத்திற்கு சமாதானப் பேச்சு வார்த்தைகளை முன்னெடுப்பதில் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. எனவே வடகிழக்கில் தற்போதைய நிர்வாகத்தை மாற்றி முழு அதிகாரத்தையும் புலிகளிடம் வழங்குவது காலத்திற்கு வெகு பொருத்தமாக அமையும். யுத்தத்தினால் அழிந்து போன வடகிழக்கை மீளக் கட்டி எழுப்புவதற்காகவே இடைக்கால நிர்வாகத்தைப் புலிகள் அரசிடம் கோரியுள்ளனா. வடகிழக்கு சாதாரண நிலைக்கு வந்த பின் இனப்பிரச்சினைக்கு முடிவு காண்பதே புலிகளின் நிலைப்பாடு ஆகும். இனப்பிரச்சினைகளுக்கு இறுதித் பட்டுள்ள இடைக்கால நிர்வாகத்தில் அரசாங்கத்தின் தலையீடு இருக்காது. ஒஸ்லோ பிரகடனத்தை இடைக்கால நிர்வாக அமைப்பு மீறியுள்ளதா? இதனால் இடைக்கால நிர் வாகத்தின் கடைசி அத்தியாயத்தை எட்ட முடியுமா?



இனப்பிரச்சினைத் தீர்வின் பொழுது யாப்பில் திருத்தங்கள் எப்படி மேற்கொள்ள வேண்டும் என்பதை இரண்டு தரப்பினரும் பேசித் தீர்மானம் எடுக்க வேண்டியது மிக அவசியம்.

மேலும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு யாப்பில் திருத்தங்கள் கொண்டுவருவதற்கு இருகட்சிகளும் பொது இணக்கப்பாடுகளுக்கு வரும் நோக்கம் இதுவரை எட்டப்படவில்லை. அத்துடன் அரசியல்யாப்பு திருத்தம் சம்பந்தமாக அரசாங்கத்திடம் திட்டங்கள் இருந்தாலும் அதை சட்ட பூர்வமாக அரசாங்கத்தால் முடியவில்லை. அத்துடன் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த நாட்டின் அரசியல் தலைவர்களுக்கு அக்கறையில்லை. 1994ஆம் ஆண்டு பொதுசன ஐக்கிய முன்னணியால் இனப்பிரச்சினைத்தீர்வுக்கு எடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளுக்கும் ஐக்கிய தேசியக்கட்சி எதிர்ப்பினை தெரிவித்தது. அதேபோல் 2001 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு ஜே.வி.பி.யும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் எதிர்ப்பைத் தெரிவித்தது.

ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணி அரசு ஏப்ரல் மாதம் ஆட்சியைக்கைப சனாதிபதிக்கு இல்லை. பேராசிரியர் சமீபத்தில் கூறியதில் உண்மை உண்டு அதை எவராலும் மறுக்க முடியாது.

1995ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் திகதி வரவு செலவுத்திட்ட விவாதத்தின் பொழுது

லக்பிம சிங்களநாளிதழில் எம். எஸ். எம். அயுப்
மொழியாக்கம்- அ. சத்திவேல்

பேராசியர் பீரிஸ் கூறுகையில் பொது மக்கள் ஒரு தீர்வுக்கு அனுமதி அளித்தால் மக்கள் பிரதிநிதிகள் அதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார். ஒருவருக்குத் தனது கருத்துரைகளை மாற்றிக்கொள்ளும் உரிமை உண்டு. சர்வசன வாக்கெடுப்பின் மூலமாக அல்லது அரசியல் யாப்பு நிறைவேற்று அதிகார மூலமாக யாப்பை மாற்றும் பொழுது அரசியல் யாப்பு நிறைவேற்றுச் சபை தேவையா என்பதைப் பற்றி சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதற்குச் சட்டத்தில் இடமுண்டு. சட்டத்தின்படி அது அங்கீகரிக்கப்படுமானால் புதிய யாப்பும் அது நிராகரிக்கப்படலாம். இது இன்றைய அரசியல் நிலைப்பாடு.

## பூநகரியில் பெருமழையால் நெற்பயிர்கள் அழிவு இழப்பீடு வழங்க விவசாயிகள் கோரிக்கை

கடந்த சில நாட்களாகப் பெய்த பெருமழையின் காரணமாக பூநகரியின் பல பாகங்களிலும் நெல் வயல்கள் நீரால்மூடி அழியும் நிலையில் உள்ளன. குறிப்பாக கறுக்காய்த்தீவு , செட்டியகுறிச்சி, ஞானி மடம் கிராமசேவகர் பிரிவில் ஞானிமடம், செம்மண் குளம் ஆகிய கிராமங்களும், கௌதாரி முனை கிராமமும் அத்தாய் பிர தேசத்தில் உள்ள நெல் வயல்களும் நல்லூரின் சில பகுதிகளிலும் நெல் வயல்கள் முற்றாகப் பாதிப்படைந்துள்ளன. இதுவிடயமாக விபரங்களை எடுத்து நஷ்டஈடு தருவதற்கு நடவடிக்கையை மேற் கொள்ளுமாறு மக்கள் பூநகரி பிரதேசச் செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (32)

## வட்டக்கச்சிப் பிரதேசத்தில் வீடுவீடாகச் சென்று கருத்துரை

வட்டக்கச்சி பகுதியில் மாவீரர் தினத்தை முன்னிட்டு கிளி/ கிழக்கு புனர்வாழ்வு நிறுவனப் பணியாளர்களும், வட்டக்கச்சி பிரதேச அரசியல் துறையினரும் வீடு வீடாகச் சென்று மக்களுடனான சந்திப்புக்களையும், கருத்துரைகளையும் வழங்கி வருகின்றனர்.

எதிர்வரும் நவம்பர் 27 மாவீரர் நாள் சிறப்பாக வட்டக்கச்சிப் பிரதேசத்தில் அனுஷ்டிக்கவும் அதற்குரிய செயற்பாடுகள் பற்றியும் வீடு வீடாகச் சென்று கருத்துரைகளை வழங்கி வருகின்றனர். (12)

# ஜே.வி.பி.யுடனான உறவு முறியின் ஆட்சியைத் தக்கவைக்க

# ரணிலின் ஆதரவைப் பெற சனாதிபதி சந்திரிகா முயற்சி

**சனாதிபதிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளால் அரசு கவிழும் நிலைஏற்பட்டால் அதைத் தவிர்க்கவே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவை நாடியுள்ளதாக கொழும்பு அரச வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

சனாதிபதிக்கும், ஜே.வி.பிக்குமிடையில் ஏற்பட்டுள்ள உள்ளக முரண்பாடுகள் காரணமாக ஆளும் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு பிளவுபடும் சூழல் அதிகரித்து வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். இவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டு அரசு பதவி கவிழாது ஆட்சியைத் தக்க வைக்கும் வகையிலான ஒரு நோக்குடனே சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தேசிய ஆலோசனைச் சபையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை உள்வாங்கும் நோக்குடன் தான் சனாதிபதி எதிர்க்கட்சி தலைவரை சந்தித்ததாக செய்திகள் தெரிவித்த போதும் அவ்வாறான ஆலோசனை சபைக்கு அழைத்து வருவதற்கான அவசரமான சந்திப்பால் ஜே.வி.பி. சனாதிபதி முறுகல் நிலை ஆளும் கூட்டமைப்பை பாதிக்கும் சூழலை ஏற்படுத்தினால் ஐக்கிய தேசியக் கட்சியை இணைத்து ஆட்சியை நடத்தும் ஒரு தந்திரோபாய அரசியல் காய் நகர்த்தலுக்கான சந்திப்பு தான் இது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் எதிர்க்கட்சித் தலைவர் உடனடியாக சாதகமான கருத்துக்களை சனாதிபதிக்கு கூறவில்லையாயினும் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை கால தாமதப்படுத்தாமல் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை தெளிவுபடுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிலிருந்து அதிருப்தியுற்று விலகிய எம்.பிக்கள் மூவருக்கும் அமைச்சு பொறுப்புக்கள் வழங்கியமை தொடர்பாக ஜே.வி.பி. கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

## -வவுனியா மாவட்டத்தில்-

# கல்வி கற்கும் திறமையுள்ள வறிய மாணவர்களுக்கு நிதி உதவி

(வவுனியா செய்தியாளர்)

கனடாவில் உள்ள அமுத கலசம் அறநெறிக் கழகத்தின் ஆதரவில் வவுனியா மாவட்ட கல்வி அபிவிருத்திச் சபையினால் வவுனியா மாவட்டத்தில் கல்வி கற்கும் திறமை உள்ள வறிய மாணவர்களிற்கு நிதி உதவி வழங்கும் நிகழ்வு வவுனியாவில் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக வியாபாரக் கற்கைகள் பீடப்பீடாதிபதி R.நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன்-கிஷோர், சிவசக்தி ஆனந்தன், வினோநோகராதலிங்கம், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் தண்டாயுதபாணி, வவுனியா மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சுபாஸ உட்பட பலர் கலந்து கொண்டனர்.(10)

# வடக்கு-கிழக்கு ஆளுநர் வவுனியாவிற்கு விஜயம்

(வவுனியா செய்தியாளர்)

வடக்கு-கிழக்கு ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன எதிர்வரும் 9 ஆம் திகதி வவுனியாவிற்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிற்கு வருகை தரும் இவர் அன்றையதினம் காலை 10.00 மணிக்கு வவுனியா அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல்வேறு திணைக்களத் தலைவர்களையும் சந்தித்து வவுனியா மாவட்டத்தின் தேவை கள் குறித்து ஆராயவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# ஏறாவூர் பி.சபை ஊழியரின் வேலைநிறுத்தம் தொடர்கிறது

(மட்டக்களப்பு)

ஏறாவூர் பற்று பிரதேச சபையினரின் வேலை நிறுத்தம் நேற்றுடன் மூன்றாவது நாளாகவும் தொடர்கின்றது.

கடந்த திங்கட்கிழமை பிரதேசசபை முன்பாக நடப்பட்டிருந்த ஒலிபெருக்கிக் கம்பத்தை பிரதேசசபை ஊழியர்கள் அகற்ற முற்பட்ட வேளை செங்கலடி வெள்ளிமலைப் பிள்ளையார் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் பிரதேசசபை ஊழியர்களைத் தகாத வார்த்தைகளால் பேசியுள்ளனர்.

இதனைக் கண்டித்தே இவ்வேலை நிறுத்தம் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. நேற்று முன்தினம் சம்பவ இடத்திற்கு நேரில் சென்ற தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். ஜெயானந்தமூர்த்தி, க.தங்கேஸ்வரி மற்றும் செங்கலடி பிரதேச செயலாளர் கிரிதரன் ஆகியோர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து பேசிய போது இவர்களின் பேச்சுக்கு இணக்கம் தெரிவிக்காததையடுத்து பிரதேச சபை ஊழியர்கள் தொடர்ந்தும் வேலைப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

## -வவுனியா மாவட்டத்தில்

# பெண்களிற்கு எதிரான வன்முறை எதிர்ப்புப் பிரச்சாரம் அறிமுகம்

(வவுனியா செய்தியாளர்)

பெண்களிற்கு எதிரான வன்முறை எதிர்ப்புப் பிரச்சாரத்தின் வவுனியா மாவட்ட அறிமுகநிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கருத்துரைகளை உளசமூகசேவைப் பிரிவில் குடும்ப வன்முறை தொடர்பான வைத்திய கலாநிதி, சசிகலா, சட்டத்தில் குடும்ப வன்முறை தொடர்பாகச் சட்டத்தரணி என்.சுதர்சன், வவுனியா மாவட்டத்தில் குடும்ப வன்முறை தொடர்பாக வவுனியா மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் திருமதி.இந்திராணி மகாலிங்கம், முஸ்லிம் சமூகத்தில் குடும்ப வன்முறை தொடர்பாக வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய அதிபர் ஹஸ்மின், விடுதலைப்புலிகளின் மகளிர் பிரிவு சார்பாக செல்வி.பிருந்தா, மாதர்சங்கம் சார்பாக திருமதி.பத்மா ஜெயச்சந்திரன் ஆகியோர் வழங்கினர்.

சிறப்புரைகளைப் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்ட ஒக்ஸ்பாம் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் மாட்டின் லின்டேஸ், வவுனியா அரச அதிபர் க.கணேஷ் ஆகியோர் நிகழ்த்தினர்.

வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன் உட்பட பலர் கலந்துகொண்ட இந் நிகழ்வில் பெண்களுக்கெதிரான வன்முறையை இல்லாதொழிக்கும் பிரச்சாரத்திட்டத்தினை மாவட்ட செயற்குழுவும், வவுனியா மாவட்ட ஒக்ஸ்பாம் நிறுவனமும் இணைந்து ஆரம்பித்துள்ளன.(10)

# மதுபோதையில் வந்த பொலிசார் வீட்டின் கதவை உடைத்தனர்

## காத்தான் குடியில் சம்பவம்

(மட்டக்களப்பு)

காத்தான் குடியில் பத்திரிகையாளர் ஏ.எல்.எம் பழுதுல்லாக்கின் வீடு உட்பட பல வீடுகளின் கதவுகள் சிறிலங்காப் பொலிசாரினால் தாக்கி சேதப்படுத்தப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் வீட்டில் இல்லாத சமயத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. காத்தான்குடி அப்துல் மஜீத் ஆலீம் வீதியில் உள்ள வீடுகளின் கதவுகளைப் பலமாக அடித்து உதைத்துதள்ளியதுடன் மின்குமிழ்களை அணைக்குமாறு கூறிவிட்டு சில்ரை தாக்கியதுடன் மின்குமிழ்களை அடித்து நொறுக்கியுள்ளனர்.

இவ்வாறான கீழ்த்தரமான நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிசார் போதையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் பற்றி மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் ரி.எல். ஜௌபர்கான் மட்டு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு தொலைநகல் கடிதமூலம் அறிவித்துள்ளார். சிரேஷ்ட பத்திரிகையாளரும், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் பிரதிச் செயலாளரும் முஸ்லிம் மீடியா போரத்தின் உறுப்பினருமான ஏ.எல்.எம். பழுதுல்லாக்கின் வீட்டின் மீது காரணம் எதுவுமின்றி பொலிசார் நடாத்திய அடாவடித்தனம் பத்திரிகை சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்டுள்ள பாரிய சவாலாகும், பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டியவர்கள் இவ்வாறு நடந்து கொள்வது பொலிஸ் சேவைக்கு களங்கத்தை ஏற்படுத்துகின்ற மோசமான கண்டிக்கத்தக்க செயலாகுமென்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காத்தான் குடியைச் சேர்ந்த ஆயிரம் பேர் ஆரையம்பதிக்கு இடம்பெயர்வு

(மட்டக்களப்பு)

காத்தான்குடியைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் அந்த நகரை விட்டு அச்சம் காரணமாக வெளியேறி அருகிலுள்ள ஆரையம்பதியில் தஞ்சமடைந்துள்ளனர்.

சுமார் 200 குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் வெளியேறி ஆரையம்பதிக்கு சென்ற போது இவர்களை அங்குள்ள தமிழ் மக்கள் ஆரையம்பதி மகாவித்தியாலயத்தில் தங்க வைத்துள்ளனர். இவர்களுக்கு சமைத்த உணவு மற்றும் நீராகாரங்கள் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த தமிழ் மக்களால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் ரவூப் மௌலவியின் மார்க்க நெறியை பின்பற்றுபவர்கள் என செய்திகள் தெரிவிக்கின்றன.

# கூட்டணிக்குள் இருக்கும் தில்லுமுல்லுக்கு நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராய வேண்டும்

## -பிரதி அமைச்சர்கள் கோரிக்கை

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகாவின் கூட்டணி அரசை பிளவுபடுத்தும் வகையில் கூட்டணிக்குள்ளேயே நடைபெறும் தில்லுமுல்லுகளுக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி ஆராய வேண்டுமென சில பிரதிஅமைச்சர்கள் அரசின் நடவடிக்கைக் குழுவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது பற்றிய கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் 3 மணித்தியாலயமாக நடைபெற்றது.

இதன் பின்னர் சனாதிபதி சந்திரிகாவுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் அமைந்த விமல் வீரவன்சவின் உரையும் பின்னர் அதற்காக அவர் சந்திரிகாவிடம் மன்னிப்புக் கோரியதையும் நோக்குமிடத்து கூட்டணிக்குள்ளேயே இதற்கான தூண்டுதல்கள் நடைபெறுவதால் ஆளும் கட்சி பாராளுமன்ற நடவடிக்கைக்குழு இது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சில பிரதி அமைச்சர்கள் கோரியிருக்கின்றனர். அத்துடன் அரசிற்குள் அங்கம் வகிக்கும் அமைச்சரோ அல்லது பிரதி அமைச்சரோ பாராளுமன்ற உறுப்பினரோ சட்டவிரோதமான முறையில் நடந்து கொண்டால் உரிய நடவடிக்கை எடுக்கவும் இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக சனாதிபதி எடுக்கும் முடிவில் தடை ஏற்பட்டால் அதனை முறியடிக்க அகில இலங்கையினர் ஆதரவைத் திரட்டவும் தீர்மானித்துள்ளனர்.

# கொழும்பில் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கான தே.போ.ஆ.குழுவின் ஆலோசகர் இராஜினாமா

(கொழும்பு)

அண்மையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அலுவலகத்தின் முன்னால் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த ஆணைக்குழுவின் சிரேஷ்ட ஆலோசகர் அசோக குணசேகர தனது பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

இவர் தற்பொழுது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவரின் ராஜினாமாக் கடிதம் நேற்று முன்தினம் கிடைக்கப் பெற்றதாக போக்குவரத்து ஆணைககுழுவின் தலைவர் அமல்குமாரகே தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து ஆணைக்குழுவின் பேருந்துமார்க்க கால அட்டவணைப் பிரிவின் சிரேஷ்ட ஆலோசகராக குணசேகர கடமையாற்றியுள்ளார்.

இந்த துப்பாக்கி சூடு அவரின் கடமையின் நிமித்தம் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகாரணமாகவே மேற்கொள்ளப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது.

தனியார் மற்றும் அரசாங்க பேருந்து சேவைகளுக்கான இணைந்த கால அட்டவணையொன்று உருவாக்குவதைக் குழப்புவதற்காகவே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

எனினும் இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றி பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### தர்மேந்திரா விரைவில் விடுவிக்கப்படுவார்

ஈராக் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட இலங்கையரான தினேஸ் தர்மேந்திராவை விரைவில் விடுவிக்கப் போவதாக நேற்று ஈராக் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

## மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
## வடக்குகிழக்கு மாகாணசபை
# வடக்குகிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (நிகொட்)
# ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

திருகோணமலை வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்ட முகாமைத்துவ காரியாலயத்திலும், மாவட்ட காரியாலங்களிலும் கீழ்க்காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பொது நிபந்தனைகள்

நியமனங்கள் திருப்திகரமான சேவை அடிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கப்படக்கூடிய ஒப்பந்த அடிப்படையிலானதாகும். அவ்வொப்பந்தம் திருப்தியடிப்படையில் மேலும் நீடிக்கப்படும். திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதிகளவு பயணம் செய்யவேண்டி ஏற்படும்.

## வயதெல்லை

விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரி 35 வயதிற்கு மேற்பட்டவராயிருத்தல் வேண்டும். 55 வயதிற்கு குறைந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வித்தகைமை, தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி, முன்னைய தொழில் விபரங்கள், முன்னைய அனுபவம் இரண்டு சான்றுபகர்வோர்களின் பெயர்கள், முகவரிகள், சுய தரவுகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட விண்ணப்பத்தினை அவர்களாகத் தயாரிக்க வேண்டும். விண்ணப்பம் பதிவுத் தபால் மூலம் 2004.11.19 திகதி அல்லது அதற்கு முன்னர் திட்டப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD) 55, கந்தசாமி கோவில் வீதி,திருகோணமலை என்ற முகவரியில் கிடைக்க வேண்டும். அரச திணைக்களம்/ அரசகூட்டுத்தாபனங்கள்/சபைகள் என்பவற்றில் சேவையிலிருப்போர் அவர்களது நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

## தெரிவு செய்யப்படும்முறை

தகைமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குறுகிய அட்டவணையிலிருந்து நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

### பிரதித் திட்டப்பணிப்பாளர் (02 வெற்றிடங்கள் திட்ட முகாமைத்துவ காரியாலயம்)

## கடமைகளும் பொறுப்புகளும்

விசேடமாக இதற்குப் பொறுப்புடையவர் பின்வரும் விடயங்களில் திட்டப் பணிப்பாளருக்கு உதவ வேண்டும்.

★ திட்ட முகாமைத்துவப் பிரிவினை திறமையாக முகாமைத்துவப்படுத்தல், அதன் நடவடிக்கைகள் மற்றும் செயல் நிறைவேற்று மதிப்பீடு என்வற்றுக்கு ஒத்துழைத்து மேற்பார்வை செய்தல்.

★ திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புடைய முறைகள் மற்றும் நடவடிக்கைகளைத் திறமையாக ஏற்பாடு செய்தல். மற்றும் விருத்தி செய்தல், திட்ட நடவடிக்கைகளின் செயற்பாடுகளில் ஒத்துழைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

★ நடைமுறைப்படுத்தலின் போது ஏற்படும் பிரச்சினைகளை உடனே கண்டு அதற்கான தீர்வு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளல்.

★ திட்ட நடைமுறைப்படுத்தலுடன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டுநிதி முகவரகங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் கிட்டிய நட்புறவினை ஏற்படுத்தி பேணி வர வேண்டும்.

★ திட்டப் பணிப்பாளரின் வேண்டுகோளின் படி வழுங்கல் ஆவணம் மற்றும் அறிக்கைகள் தயாரிக்க வேண்டும்.

## தேவையான தகைமையும் அனுபவமும்

பொறியியல், விஞ்ஞானம், சட்டம், பொருளியல்,வர்த்தகம், விவசாயம்,வியாபார நிர்வாகம்/முகாமைத்துவம், கணக்கியல் அல்லது வேறு ஏதாவது துறையில் பட்டமொன்றுடன் வெளிநாட்டு நிதி நிறுவனங்களினால் நிதியிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிரேஷ்ட முகாமைத்துவத்தரத்தில் 08 வருடங்களுடன் 12 வருட அனுபவம் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.

### அல்லது

குறிப்பிட்ட துறையில் பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு தகைமை (கலைமாணி/டிப்ளோமா)அல்லது குறிப்பிட்ட துறையில் அங்கீகரிக்கப் பட்டதொழில்சார் நிறுவனமொன்றின் கூட்டு அங்கத்துவத்துடன் வெளிநாட்டு நிதி முகவரகங்களில் நிதியிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதில் 05 வருடங்கள் உட்பட 08 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

## தொழில்சார் திறமைகள்

★ சிக்கலான மற்றும் மாறுபட்ட நடவடிக்கைகளுடனான திட்டங்களைத் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கான திறமை.

★ திட்டத்தின் நீண்டகால நீடித்த தன்மையை உறுதி செய்வதற்கான திறமையான நடைமுறைப்படுத்தலுக்கு பங்குதாரர்களின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பனவற்றை ஊக்குவிப்பதற்கான திறமை.

★ பலதரப்பட்ட ஒழுக்காற்று குழுக்களின் வேலைகளைத்திறமையாக ஏற்பாடு செய்து முன்னெடுத்துச் செல்லும் திறமை.

★ திட்டநடைமுறைப்படுத்தல் விடயங்களை ஆராய்ந்து தீர்ப்பதற்கான திறமை.

★ திறமையானதொடர்பாடல் மற்றும் கலந்தாலோசிக்கும் திறமை மற்றும் சிறந்த தனிப்பட்ட தொடர்புகள் இருத்தல் வேண்டும்.

★ அரசாங்க நடைமுறைகள் மற்றும் விதிகள் பற்றி போதிய அறிவுடையவராயிருத்தல் வேண்டும்.

★ கணினி அறிவு பெற்றிருத்தல்.

★ ஆங்கிலத்தில் எழுதவும், கதைப்பதற்கும் உயர் மட்டத்தேர்ச்சி இருத்தல்.

⇨

## சம்பளம்

2000.12.26ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் இல10 இன் 05ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் பேசித்தீர்மானிக்கப்படலாம்.

### நிதி முகாமைத்துவ நிபுணர் [01 வெற்றிடம் திட்ட முகாமைத்துவ காரியாலயம்]

## கடமைகளும் பொறுப்புகளும்

கணக்கீட்டு நடைமுறைகள் உள்ளகக்கட்டுப்பாடு உட்பட நிதி முகாமைத்துவ நடைமுறைகளை நிறுவுதல் அவற்றைப் பேணுதல் திட்டமிடுதல், பாதீடு, நிதி அறிக்கையிடும் நடைமுறைகள், கணக்கீட்டு நடைமுறைகள் உட்பட பின்வருவன தொடர்பாக திருப்திகரமான நிலைப்பாட்டினைப் பேணுதல்.

★ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளை பிரதிபலிக்கக்கூடியதாகவும் தொழிற்பாடுகள் தொடர்பாகப் பிரத்தியேக வழிகாட்டல்களுக்கமைய எடுக்கப்படவேண்டிய நடைமுறைகள் பற்றியும் திட்டத்திற்கான வளங்களை செலவீனங்கள் மேற்கொள்வது தொடர்பாகவும் அறிவுரைகள் வழங்குதல்.

★திட்டத் தொழிற்பாடுகளை முகாமைத்துப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் ஏதுவாக சரியானதும் உரிய நேரத்திற்கு அவசியமானதுமான தகவல்களை வழங்குதல்.

★கணக்கணி தகைமையை உறுதி செய்வதுடன் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதி வளங்களை திறமையான பயன்பாட்டிற்கு வழியமைத்தல்.

## தேவையான தகைமையும் அனுபவமும்

★நிதி முகாமைத்துவக் கணக்கீடு தொடர்பான உயர்பட்டதாரி (MBA/MA) அல்லது அதற்கு சமமானதொழில்சான்றிதழ் (உதாரணமாக CIMA/ACCA/ICASL) 10 முதல் 15 வருடங்கள் வரையிலான நிதித்துறை அல்லது வர்த்தகத் தொழிற்பாடு அல்லது அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றில் உயர்மட்டப் பதவிக்குரிய தொழில் அனுபவம்.

## தொழில்சார் திறமைகள்

★சர்வதேச கணக்கீட்டு நியமங்களிலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறையிலும் கொள்வனவு நடைமுறையிலும் சிறந்த நடைமுறைக்கால அனுபவம்.

★இலங்கையில் நடைமுறையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளிலும் நடைமுறைகளிலும் அரசுத்துறைக் கணக்கீட்டிலும் செலவினக்கட்டுப்பாட்டு நடைமுறையிலும் சிறந்த அறிவு

★திட்ட மட்டத்தில் அல்லது நிறுவன மட்டத்தில் கணக்கீட்டு நடைமுறை உருவாக்கம் ஆவணப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் தொடர்பான அனுபவம்

★கணினி அறிவு பெற்றிருத்தல்.

## சம்பளம்

2000.12.26 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் இல10இன் 5ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் பேசித்தீர்மானிக்கப்படலாம்.

### தொழில்நுட்பப்பணிப்பாளர் பதவி [01 வெற்றிடம் திட்டமுகாமைத்துவ காரியாலயம்]

## கடமைகளும் பொறுப்புகளும்

கருத்திட்ட அமுலாக்கும் திட்டத்திலும் கடன் ஒப்பந்தத்திலும் விபரிக்கப்பட்ட திட்டத்தினை தயாரிப்பதிலும் கையாளுவதிலும் செயற்படுத்துவதிலும் தேவையான விசேட தொழில்நுட்பங்களை வழங்க வேண்டும்.

## தேவையான தகைமையும் அனுபவமும்

குறைந்தது 15 வருட அனுபவத்தினைக்கொண்ட பட்டய எந்திரி

## தொழில்சார் திறமைகள்

★திட்டப் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குவதோடு திட்டத்திற்குத் தேவையான தொழில்நுட்ப சேவையை வழங்கும் ஆற்றல்.

★திட்டமுகாமைத்துவப் பிரிவில் கிடைக்கும் பல வித திட்டங்களை தொழில்நுட்ப ரீதியாகக் கணிப்பிடும் ஆற்றல்.

★சேவைகளையும் வழங்கல்களையும் பொருட்களையும் பெற்றுக்கொள்வதற்கான அடிப்படையான அறிவைக் கொண்டிருப்பதோடு திட்டத்தினைச் சிறப்பான துறையில் செயலாற்ற கண்காணிக்கும் ஆற்றல்.

★தனக்குரிய வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்வதற்கான ஆற்றல்.

★கணினி அறிவு பெற்றிருத்தல்

★எழுத்துமூலமாகவும் வாய் மூலமாகவும் திறமையாக தொடர்புகொள்ளும் ஆற்றல்.

★ஆங்கிலத்தில் எழுதவும் கதைப்பதற்குமான உயர்மட்டத் தேர்ச்சி.

★கேள்விகளைக் கணிப்பீடு, செய்வதிலும் கொள்வனவு நடைமுறைகளிலும் அறிவினைக்கொண்டிருத்தல்

## சம்பளம்

2000.12.26 ஆம் திகதிய முகாமைத்துவ சுற்றுநிருபம் இல10இன் 05 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் பேசித்தீர்க்கப்படலாம்.

### சுகாதார நிபுணர் பதவி [01 வெற்றிடம் திட்ட முகாமைத்துவ காரியாலயம் ]

## கடமைகளும் பொறுப்புகளும்

சுகாதார நிபுணர் திட்டமுகாமைத்துவப் பிரிவின் ஓர் பகுதியாகும். ஆனால் மாகாண சுகாதார திணைக்களத்திலிருந்து கடமை புரிவார். சுகாதார நிபுணர் சுகாதார நிர்வாகத்திலும், நோய் பரவாது தடுத்தலிலும் , குணப்படுத்தலிலும் அனுபவம் வாய்ந்த வைத்தியத்துறையில் தேர்ச்சியுடையவராயிருப்பார். அத்தோடு சுகாதார நிர்வாகத்திலும் மாவட்டங்களில் திட்டமிடல் முகாமைத்துவ ஆளணியின் மதிப்பைப் பெற்றவராயிருத்தல் வேண்டும். பின்வரும் பணிகளை அவர்/அவள் மேற்கொள்வார்.

★சுகாதாரவசதிகளுக்கு ஆதாரமான திட்டங்களை திட்டமிடுவதிலும் செய்படுத்துதலிலும் திட்டப்பணிப்பாளருக்கு ஆதரவாயிருத்தல்

★பொதுச் சுகாதார தாதிமார்களையும் சுகாதார தொண்டர் வேலையாட்களையும் நியமனம் செய்வதிலும் பயிற்றுவிப்பதிலும் நிறுவனத்திற்கு உதவியாயிருத்தல்.

★ சுகாதார தொண்டர்வேலையாட்களுக்கான பாடத்திட்டத்தை தயாரிப்பதில் உதவியாய் இருத்தல்.

★ வைத்திய சுகாதார விடயங்களில் திட்டப்பணிப்பாளருக்கு தொழில்நுட்ப வழிகாட்டல்.

★ தண்ணீர், சுகாதார திட்டங்கள்செயல்படுத்தப்படும் பாடசாலைகளிலும் கிராமங்களிலும் பிரதேசசுகாதார சேவைகள் அத்தியட்சகரும், மற்றும் சுகாதார உத்தியோகத்தர்களும், சுகாதாரக் கல்வித் திட்டங்களைநடைமுறைப்படுத்துவதை உறுதி செய்து கொள்ளுதல்.

★ சுகாதார விடயங்கள் சம்பந்தமான திட்டவேலைகளுக்கும், மதிப்பீடுகளுக்கும் ஆய்வுரைகளுக்கும் சுகாதார திணைக்களத்தின் ஆதரவினை பெற்றுக்கொள்ளுவதை ஒழுங்குபடுத்துவதும் உறுதிபடுத்துவதும்.

★ கால அட்டவணைக்கேற்பவும் நல்ல தரத்தினை பேணுவதற்காகவும் சுகாதார திட்டநடவடிக்கைகள் (பொதுசுகாதாரசேவைகள் மீளத்தாபித்தலும் வைத்திய வசதி மேம்பாடுகள் பொதுசுகாதார தாதிகள் பயிற்சி) செயல்படுத்துவதை உறுதிசெய்தல்.

★ திட்டப்பணிப்பாளர் தமது திட்ட முன்னேற்ற அறிக்கையில் சேர்த்துக்கொள்ளுவதற்காக சுகாதார உப திட்டங்களின் நிலைமை களையும் தகவல்களையும் பேணிப்பாதுகாத்தல்.

## தேவையான தகைமையும் அனுபவமும்

சுகாதார நிர்வாகத்திலும், நோய்வராது தடுப்பதிலும் குணப்படுத்திலிலும் உள்ள அனுபவத்துடனான வைத்திய கலாநிதிப்பட்டம். கணினி அறிவு பெற்றிருத்தல் .

## சம்பளம்.

2000.12.26 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபம் இல.10 இன் 05 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்ப தாரியின் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் பேசித்தீர்மானிக்கப்படலாம்.

## மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் பதவி (02 பதவி வெற்றிடங்கள் மட்டக்களப்பு முல்லைத்தீவு)

## கடமைகளும் பொறுப்புகளும்

விசேடமாக இதற்குப் பொறுப்புடையவர் பின்வரும் விடயங்களில் திட்டப்பணிப்பாளருக்கு உதவ வேண்டும்.

★ திட்ட முகாமைத்துவப் பிரிவினை திறமையாக முகாமைத்துவப்படுத்தல், அதன் நடவடிக்கைகள் மற்றும் செயல் நிறைவேற்று மதிப்பீடு என்பவற்றுக்கு ஒத்துழைத்து மேற்பார்வை செய்தல்.

★ திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புடைய முறைகள் மற்றும் நடவடிக்கைகளை திறமையாக ஏற்பாடு செய்தல் மற்றும் விருத்தி செய்தல், திட்ட நடவடிக்கைகளின் செயல்பாடுகளில் ஒத்துழைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

★ நடைமுறைப்படுத்தலின் போது ஏற்படும் பிரச்சினைகளை உடனே கண்டு அதற்கான தீர்வு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளல்.

★ திட்ட நடைமுறைப்படுத்தலுடன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிதிமுகவரகங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் கிட்டிய நட்புறவினை ஏற்படுத்தி பேணி வரவேண்டும்.

★ திட்டப்பணிப்பாளரின் வேண்டுகோளின் படி வளங்கள், ஆவணம் மற்றும் அறிக்கைகள் தயாரிக்க வேண்டும்.

## தேவையான தகைமையும் அனுபவமும்

நாடளாவிய சேவையின் 1 ஆம் வகுப்பிலுள்ளோர் நியமனத்திற்கு தகுதி பெற்றவர்களாவர். பொருத்தமான முதலாம் வகுப்பு விண்ணப்பங்கள் போதியளவு இல்லாத சந்தர்ப்பங்களில் நாடளாவிய சேவையின் II/I வகுப்பிலுள்ளோர் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவர்.

## தொழில்சார் திறமைகள்

★ சிக்கலான மற்றும் மாறுபட்ட நடவடிக்கைகளுடனான திட்டங்களைத் திட்டமிட்டு செயல்படுத்துவதற்கான திறமை.

★ திட்டத்தின் நீண்ட கால நீடித்த தன்மையை உறுதிசெய்வதற்கான திறமையான நடைமுறைப்படுத்தலுக்கு பங்குதாரர்களின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பனவற்றை ஊக்குவிப்பதற்கான திறமை.

★ பலதரப்பட்ட ஒழுக்காற்றுக் குழுக்களின் வேலைகளை திறமையாக ஏற்பாடு செய்து முன்னெடுத்துச் செல்லும் திறமை.

★ திட்டநடைமுறைப்படுத்தல் விடயங்களை ஆராய்ந்து தீர்ப்பதற்கான திறமை.

★ திறமையான தொடர்பாடல் மற்றும் கலந்தாலோசிக்கும் திறமை மற்றும் சிறந்த தனிப்பட்ட தொடர்புகள் இருத்தல் வேண்டும்.

★ அரசாங்க நடைமுறைகள் மற்றும் விதிகள் பற்றி போதிய அறிவுடையவராய் இருத்தல் வேண்டும்.

★ கணினி அறிவு பெற்றிருத்தல்.

★ ஆங்கிலத்தில் எழுதவும், கதைப்பதற்கும் உயர் மட்டத் தேர்ச்சி இருத்தல்.

## சம்பளம்

அரச சேவையில் இப்பதவிக்குரித்தான சம்பளமும் விண்ணப்பதாரியின் தகைமைகளுக்கும் அனுபவத்திற்குமமைவாக 2000.12.26 ஆம் திகதிய இல:10 முகாமைத்துவ சுற்றுநிருபத்திற்கேற்ப சம்பளத்தின் 50 % மேற்படாத படி ஒன்று வழங்கப்படும்.

## கணக்காளர் பதவி II/I (04 பதவி வெற்றிடங்கள் திட்டமுகாமைத்துவ காரியாலயம், மட்டக்களப்பு,கிளிநொச்சி, அம்பாறை)

## கடமைகளும் பொறுப்புகளும்

நிதி முகாமைத்துவத்தை ஸ்தாபிப்பதும், பராமரிப்பதும் உள்ளக நிதிக்கட்டுப்பாடு திட்டமிடுதல், வரவு செலவுத்திட்டத்தைத் தயாரித்தல், கணக்குகளை சரியாக அறிக்கை செய்தலும் கணக்காய்வு செய்தலும் இவைகளைச் சரிவரச் செய்வதற்கேதுவாக தேவையான புத்தகங்களை தயாரிப்பதும், பராமரிப்பதும்.

## தேவையான தகைமையும் அனுபவமும்

★ இலங்கை அல்லது ஐக்கிய இராச்சிய பட்டையக் கணக்காளர் நிறுவனத்தின் நடுநிலை பரீட்சை அல்லது உரிமத்தவர் பரீட்சை அல்லது

- ★ ஐக்கிய இராச்சிய பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் பகுதி 1 இ, பகுதி 2 இல் சித்தி அல்லது
- ★ ஐக்கிய இராச்சியத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பகுதி 1 இ, பகுதி 2 இல் சித்தி அல்லது
- ★ இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமாவில் சித்தி அல்லது
- ★ இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் உயர்தேசிய வர்த்தக டிப்ளோமாவில் சித்தி அல்லது
- ★ அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கணக்கியல் அல்லது பொருளியல் பாடத்தில் பட்டதாரி அல்லது
- ★ ஐக்கிய இராச்சிய செயலாளர்களினதும் நிர்வாகிகளினதும் பட்டய நிறுவனத்தின் இறுதிப்பரீட்சையில் சித்தி.

### சம்பளம்

அரச சேவையில் இப்பதவிக்குரித்தான சம்பளமும் விண்ணப்பதாரியின் தகைமைகளுக்கும் அனுபவத்திற்குமமைவாக 2000.12.26 ஆம் திகதிய இல:10 முகாமைத்துவ சுற்றுநிருபத்திற்கேற்ப சம்பளத்தின் 50% மேற்படாத படி ஒன்று வழங்கப்படும்.

## உதவித்திட்டமிடல் பணிப்பாளர் [02 பதவி வெற்றிடங்கள் திட்டமுகாமைத்துவக் காரியாலயம்]

### கடமைகளும் பொறுப்புகளும்

சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டங்களையும், உபகருத்திட்டங்களையும் திட்டமிடுதலிலும் செயற்படுத்தலிலும் திட்டப் பணிப்பாளருக்கு உதவிசெய்ய வேண்டும். உபகருத்திட்டங்களை செவ்வனே செயற்படுத்துவதற்கு தேவையான தகவல்களை திரட்டுதல், முன்னேற்ற அறிக்கை தயாரித்தல், அத்தோடு கருத்திட்ட யோசனைகளை தயாரிப்பதில் திட்டப்பணிப்பாளருக்கு உதவி செய்ய வேண்டும்.

### தேவையான தகைமைகளும் அனுபவங்களும்

- ★ அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையின் முதலாம் தரச் சித்தி அல்லது இரண்டாம் தரச் சித்தி பட்டதாரியாக இருத்தல் வேண்டும் அல்லது
- ★ அங்கீகரிக்கப்பட்ட சர்வ கலாசாலையின் பின்படிப்பு பட்டதாரியாக இருத்தல் வேண்டும் அல்லது
- ★ அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசலையின் பின்படிப்புப் பட்டதாரி டிப்ளோமாவை உடையவராக இருத்தல் வேண்டும்.

### சம்பளம்

அரசசேவையில் இப்பதவிக்குரித்தான சம்பளத்துடன் விண்ணப்பதாரியின் தகைமைகளுக்கும் அனுபவத்திற்குமமைவாக 2000.12.26 ஆம் திகதிய இல:10 முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரமாணம் 5 இற்கு அமைவாக அப்பதவிக்கான சம்பளத்தின் 50% மேற்படாத படி ஒன்று வழங்கப்படும்.

## உள்ளகக் கணக்காய்வாளர் [01 பதவி வெற்றிடம் திட்டமுகாமைத்துவக் காரியாலயம்]

### கடமைகளும் பொறுப்புகளும்

நிதி முகாமைத்துவம் செவ்வனே இருப்பதற்காக நிதிமுகாமைத்துவத்தின் உள்ளகக்கட்டுப்பாட்டிருக்குப் பொறுப்பாகவிருத்தல்.

### தேவையான தகைமைகளும் அனுபவங்களும்

பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது ஐக்கிய இராச்சிய பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (CIMA) அல்லது ஐக்கிய இராச்சியத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின (CACA) ஆ[illegible]ப நிலையில் பகுதி 01, பகுதி 02 இல் சித்தியும், தொழில்சார் நிலையில் பகுதி 01 இல் சித்தியும் இருத்தல் வேண்டும். அத்துடன் க[illegible]க்காய்வுத் துறையில் மூன்று வருட நிறைவேற்றுத் தகைமையை கொண்டிருத்தல் வேண்டும்.

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் உயர் தேசியக் கணக்கியல் /வர்த்தக டிப்ளோமாவில் சித்தி அல்லது [illegible]ங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கணக்கியல் அல்லது பொருளியல் பாடத்தில் பட்டதாரி, அத்துடன் கணக்காய்வுத்து[illegible]யில் 5 வருட நிறைவேற்றுத் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### சம்பளம்

அரச சேவையில் இப்பதவிக்குரித்தான சம்பளத்துடன் விண்ணப்பதாரியின் தகைமைகளுக்கும், அனுபவத்திற்குமமைவாக 2000.12.26 ஆம் திகதிய இல:10 முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரமாணம் 5 இற்கமைவாக அப்பதவிக்கான சம்பளத்தின் 50 % மேற்படாத படி ஒன்று வழங்கப்படும்.

## நிர்வாக உத்தியோகத்தர் [01 பதவி வெற்றிடம் திட்டமுகாமைத்துவக் காரியாலயம்]

### கடமைகளும் பொறுப்புகளும்

ஏற்புடைத்தான உரிய நடைமுறைகளுடன் காரியாலய நிர்வாக முறைமையை கொண்டுநடாத்துவதிலும் ஸ்தாபித்தலிலும் திட்டப்பணிப்பாளருக்கு உதவியாகவிருத்தல்.

### தேவையான தகைமைகளும் அனுபவங்களும்

பொது எழுதுநர் சேவையின் அதிவிசேட தரம், விசேடமாக வெளிநாட்டு நிறுவனங்களினால் நிதிப்படுத்தப்படும் திட்டங்களில் செய்யப்படும் வழங்கல்கள் சம்பந்தமான அறிவு, அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் உதவி வழங்கும் ஸ்தாபனங்களுடனும் கடித மூலத் தொடர்பு கொள்வதற்கான ஆங்கில அறிவு.

சி.ரங்கராஜா,
பிரதம செயலாளர்,
தலைவர்,
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு
அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)
திருகோணமலை.

(சி-10598)

# மும்பை டெஸ்ட் போட்டி மழையால் பாதிப்பு
# இந்தியா 2 விக்கெட் இழப்பிற்கு 22 ஓட்டம்




அவுஸ்திரேலிய-இந்திய அணிகளுக்கிடையிலான நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடும் இந்தியா இரண்டு விக்கெட்டுகளை இழந்து 22 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்தப் போட்டி மழை காரணமாக நான்கரை மணி நேரம் தாமதமாகவே ஆரம்பமானது. இருந்தும் 11 ஓவர்கள் மாத்திரமே வீசப்பட்ட நிலையில் இந்தியா ஆரம்ப இரு விக்கெட்டுகளையும் இழந்து 22 ஓட்டங்களைப் பெற்றது.

ஷேவாக் 08 ஓட்டங்களைப் பெற்று மெக்ராத்தின் பந்து வீச்சிலும் கௌதம் ஹாம்பீர் 3 ஓட்டங்களைப் பெற்று கிளெஸ்பியின் பந்து வீச்சிலும் ஆட்டமிழந்தனர்.

நேற்றைய ஆட்ட நேர முடிவில் ஆட்டமிழக்காது ராவிட் 9 ஓட்டங்களுடனும் டெண்டுல்கர் இரண்டு ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்திய அணியைப் பொறுத்து இவர்கள் இருவரினதும் இணைப் பாட்டம் மிகமிக அவசியமானதாகவுள்ளது.



ஏற்கனவே மூன்று டெஸ்ட் போட்டிகளில் இரண்டில் தோல்வி அடைந்தும் ஒரு போட்டி சமநிலையில் முடிவுற்ற நிலையில்



இந்தப் போட்டியில் வெற்றி பெற்றால் தான் இந்தியா தனது சொந்த மண்ணில் ஓரளவு கௌரவத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடியும் இல்லாது போனால் அவுஸ்திரேலியாவிடம் பாரிய அடியை வாங்கியதாக அமைந்துவிடும்.

ஏற்கனவே 35 ஆண்டுகளின் பின்னர் சாதனை வெற்றி ஒன்றைப் பெற்றுக் கொடுத்துள்ள நிலையில் இப்போட்டியில் இந்தியா வெற்றி பெற வேண்டிய நிலையில் உள்ளது அதனையே இரசிகர்களும் விரும்புகின்றனர்.

# அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மும்பை டெஸ்டில் முழுத்திறமையுடன் ஆடி வெற்றிபெறுவோம்

ராகுல் ராவிட்



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 4-ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முழுத்திறமையையும் வெளிப்படுத்தி ஆடி வெற்றி பெறுவோம் என்று இந்திய அணித்தலைவர் ராவிட் நம்பிக்கை தெரிவித்தார்.

3-ஆவது டெஸ்ட் நடந்த நாக்பூர் பிட்ச் வேகப் பந்துக்குச் சாதகமாக இருக்கும் என்பதால் மன ரீதியாக இந்திய வீரர்கள் பயந்து விட்டனர் என்ற கில்கிறிஸ்டின் குற்றச்சாட்டை மறுக்கிறேன்.

எந்த பிட்ச்சிலும் ஆடிப் பார்த்த பிறகு தான் அதன் தன்மை தெரியும். அதற்கு முன்பாக கணித்துக் கூறமுடியாது இப்படித்தான் இருக்கும் என நிர்ணயித்தாலும் சில நேரத்தில் தன்மை நேரடியாக மாறி இருக்கும்.

எப்பொழுதும் சிறப்பாக ஆட வேண்டும் என்பதுதான் எங்களது ஆசை 4-ஆவது டெஸ்டைப் பார்த்துவிட்டு எங்களது ஆட்டத்தின் திறனை முடிவு செய்யுங்கள். இந்த டெஸ்டில் முழுத்திறனையும் வெளிப்படுத்தி ஆடி வெற்றி பெறுவோம். தற்போது இந்திய அணிக்குத் தேவை சிறப்பாக ஆட வேண்டும் என்ற வெறி ஆகும்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடந்துள்ள டெஸ்ட் போட்டிகளில் திட்டமிட்டுத் தான் ஆடினோம். ஆனால் திட்டம் முழுவதையும் வெளிப்படுத்த முடியவில்லை. எங்கள் திட்டத்தை விட அவுஸ்திரேலியர்கள் திட்டத்தைச் சிறப்பாக செயற்படுத்தினர். இதனால் வெற்றி பெற்று உள்ளனர். இவ்வாறு ராவிட் கூறினார்.

# பாகிஸ்தான் வலுவுள்ள அணியாக இருப்பினும் பயிற்சியில் குறைவடைந்தே காணப்படுகிறது

பொப் வூல்மா



அடுத்த மாதம் அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுலா மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணி விளையாட்டில் வலுவுள்ளதாக இருப்பினும் பயிற்சியில் குறைவடைந்தே காணப்படுகின்றது என பொப் வூல்மர் தெரிவித்துள்ளார்.

இவ் வருட முற்பகுதியில் இந்தியாவிடம் பலதோல்விகளைச் சந்தித்ததையடுத்து பாகிஸ்தான் அணியின் பயிற்றுனராக இருந்த மியாண்டாட் பதவிவிலகினார். பின்னர் பயிற்சியாளராக தென்னாபிரிக்காவின் பொப் வூல்மர் அவ்விடத்தை நிரப்பினார். அத்துடன் பாகிஸ்தான் ஒரு சில போட்டிகளில் வென்றதுடன் சிறிலங்காவுடனான டெஸ்ட் தொட ரைச் சமப்படுத்தியது.

ஆகவே பாகிஸ்தானிய அணி சற்றுப் பலம் பொருந்தியிருப்பினும் நல்ல பயிற்சியும் தொழில் நுட்பமும் தேவை எனக் குறிப்பிட்டார்.

# பவளவிழா கிரிக்கெட்டில் இந்தியாவை வென்று ரம்ழான் பரிசாக பாக். மக்களுக்கு அர்ப்பணிப்போம்

இன்சமாம் உல்-ஹக்

பவள விழாவையொட்டி நடக்கும் இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்று அதை ரம்ழான் பரிசாக பாகிஸ்தான் மக்களுக்கு பரிசளிப்போம் என்று பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் சபையின் பவள விழாவையொட்டி இந்திய பாகிஸ்தான் அணிகளிடையே ஒருநாள் போட்டி நடத்தத் திட்டமிடப்பட்டது. அதன் படி இவ்விரு அணிகளுக்கு இடையேயான போட்டி வருகிற 13ஆம் திகதி கல்கத்தாவில் நடக்கிறது.

இந்த நிலையில் இந்தப் போட்டி குறித்து பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் கூறியதாவது:-

நீண்ட இடைவெளிக்குப் பிறகு இந்தியாவில் பயணம் செய்து விளையாட உள்ளோம் எப்பொழுதுமே இந்தியா-பாகிஸ்தான் இடையேயான ஆட்டம் என்றால் அதிக அளவில் எதிர்பார்ப்பு இருக்கும். அது தற்போதும் உள்ளது.

இந்திய கிரிகெட் சபையின் பவள விழாவையொட்டி நடக்கும் இந்தப் போட்டி ரம்ழான் பண்டிகைக்கு (14 ஆம் திகதி) முதைய நாள் நடக்கின்றதுஎனவே இந்த போட்டியில் வெற்றி பெற்று அதை பாகிஸ்தான் மக்களுக்கு ரம்ழான் பரிசாக அளிப்போம். முதுகுவலி காரணமாக என்னை ஒரு வாரம் ஓய்வு எடுக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தின் போதும் முதுகுவலி சிரமத்தை ஏற்படுத்தும் என்று நினைக்கிறேன்.



இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்டில் தோல்வி அடைந்தாலும் 2-ஆவது டெஸ்டில் முன்னணிப் பந்து வீச்சாளர்களான அக்தர், முகமது சமி ஆகியோர் இல்லாமலேயே வெற்றி பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது இவ்வாறு இன்சமாம் கூறினார்.



சிறிலங்கா-பாகிஸ்தான் கலந்து கொண்ட டெஸ்ட் போட்டியில் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றதால் இரு அணித் தலைவர்களும் கோப்பையைப் பகிர்ந்து கொள்ளும் காட்சி

# ஆசிய ஜூனியர் மகளிர் ஹொக்கி இறுதிப் போட்டியில் சீனா ,கொரியா

ஹைதராபாத்தில் நடைபெற்றுவரும் 4-ஆவது ஆசிய ஜூனியர் மகளிர் ஹொக்கி சாம்பியன் போட்டியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் சீனா 3-2 என்ற கோல்கணக்கில் இந்தியாவை வென்றதன் மூலம் இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

மற்றொரு ஆட்டத்தில் கொரியா 6-2என்ற கோல்கணக்கில் ஜப்பானை வென்றது.

அதையடுத்து இதுவரை நடைபெற்ற லீக் போட்டியில் தலா 7 புள்ளிகளைப் பெற்றுச் சீனாவும்,கொரியாவும் இறுதிப் போட்டிக்கு நுழைந்தன. இறுதிப்போட்டி இன்று நடைபெறுகின்றது.

ஜப்பான் 3 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இந்தியா புள்ளிகள் எதையும் பெறவில்லை. 3 மற்றும் 4 ஆம் இடத்துக்கான போட்டியில் இந்தியாவும் ஜப்பானும் மோதுகின்றன. இப்போட்டியும் இன்று நடைபெறுகின்றது.

# இன்டோர் டென்னிஸ் நோவக் சம்பியன்

சுவிஸ் இன்டோர் டென்னிஸ் தொடரில் செக்குடியரசின் ஜெர்ரி நோவக் சம்பியன் பட்டம் கைப்பற்றினார்.

சுவிற்சர்லாந்தில் உள்ள பசெல் இன்டோர்ஸ் டென்னிஸ் தொடர் நடந்தது. ஆண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டி நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் ஆர்ஜன்டீனாவின் டேவிட்நல்பாந்தியன், செக்குடியரசின் நோவக்கை எதிர்த்து விளையாடினார். இரு வீரர்களும் மாறிமாறி செட்களைக்கைப்பற்ற கடும் போட்டி நிலவியது. இறுதியில் நோவக் 5-7,6-3,6-4,1-6,6-2 என்ற நீண்ட செட்களில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.




# கங்குலிக்கு அறிவுரை

வலது தொடையில் ஏற்பட்ட வலியிலிருந்து மீள இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் சௌரவ் கங்குலிக்கு ஓய்வு எடுக்கும் படியும், மருந்துகளுடன் தினசரி நீச்சற் பயிற்சி மேற்கொள்ளுமாறும் அவரைப் பரிசோதித்த மருத்துவர் அறிவுறுத்தியுள்ளார்.

கல்கத்தாவில் உள்ள கங்குலியின் இல்லத்தில் அவரைப்பரிசோதித்த பிரபல எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர் கல்யாண் முகர்ஜி இந்த அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

கங்குலியின் தொடைத் தசையில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் ஒரு வாரத்திற்குப் பிறகு அவரை மீண்டும் பரிசோதிக்க உள்ளேன். அதன் பின்னர் வரும் நவம்பர் 13 ஆம் திகதி பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெறும் ஒரு நாள் போட்டியில் அவர் விளையாட முடியுமா என்பது தெரியும் என்றார் முகர்ஜி.

# இவ்வாண்டின் சிறந்த அவுஸ். வீரராக லீமன்

விஸ்டன் சஞ்சிகை தகவல்

அவுஸ்திரேலியாவின் கடந்த ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரராகச் சகலதுறை வீரர் டரன் லீமன் அந்த ஆண்டுக்கான விஸ்டன் சஞ்சிகையினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2004-2005 ஆம் ஆண்டுக்கான விஸ்டன் கிரிக்கெட்ஸ் சஞ்சிகையே இந்த ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரராக டரன் லீமனைத் தெரிவு செய்துள்ளது.

அதன் முதல் பக்கத்தில் ஷேன் வோர்னின் சாதனையுடனான வர்ணப்புகைப்படம் வெளியிடப்பட்டுள்ளது. 141 ஆண்டு கால பழமை வாய்ந்தது இந்தச் சஞ்சிகை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தெரிவு தன்னைப் பொறுத்த மட்டில் மகிழச்சி தருவதாக லீமன் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் பதிலைப் பொறுத்தே இந்திய சுற்றுலாவில் இணைவேன்

நிக்கிபோயே

கிரிக்கெட் ஊழல் தொடர்பாகக் கைதுசெய்யமாட்டோம் என்ற உறுதிமொழி கிடைத்தால் மட்டுமே இந்தியாவுக்குச் செல்வேன் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் துணைத்தலைவர் நிக்கி போயே தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக இந்திய அரசின் பதிலுக்குக் காத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 2000 இல் நடைபெற்ற கிரிக்கெட் ஊழல் தொடர்பாக தென்னாபிரிக்க வீரர்கள் நிக்கி போயே, ஹர்ஷல் கிப்ஸ் ஆகியோர் கைது செய்யப்படுவார்கள் என்று டில்லிப் பொலிசார் தெரிவித்திருந்தனர்.

இதனிடையில் இது தொடர்பாக அனுப்பப்பட்ட கேள்விக்கு இருவரும் பதிலளித்துள்ளனர். இந்தியா வரும்போது விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கத் தயாராக உள்ளதாகவும் கைது செய்யப்பட மாட்டோம் என்று உறுதி அளிக்க வேண்டும் என்று இருவரும் கோரினர்.

இதனிடையில் இப்பிரச்சினை தொடர்பாக டில்லி பொலிஸ் கமிஷனர் கே.கே.பாலை தென்னாபிரிக்கத் துணைத்தலைவர் டி.எம் நிக்ஸி வேமி செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசினார்.

## சிந்தனைக்கு



தமிழினத்தின் நீண்ட பெருமைமிக்க வரலாற்றில் புதைந்து போன ஒருவீர மரபு மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றது

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 04-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

# முதல் இலக்கு சபாநாயகர்!

அரசியல் யாப்பை மாற்றுவது- அதற்கு முன்னோடியாக பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றுவது- இதனைச் செய்து முடிக்க முதலில் சபாநாயகரை மாற்றுவது என்பது போன்ற தொடர் நடவடிக்கைகள் பற்றியதாகவே சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகள் உள்ளன.

அரசியல் யாப்பை மாற்றுவதற்கு முன்பாக பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றுவதனால் அதற்கு சபாநாயகரின் ஆதரவு அவசியமானதாகும். ஆனால் தற்போதைய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர் சபாநாயகராக இருப்பது சனாதிபதி சந்திரிகாவிற்குப் பெரிதும் இடையூறு விளைவிக்கும் ஒன்றாகவே உள்ளது.

சனாதிபதி சந்திரிகாவின் தற்போதைய பணியாக இருப்பது பாராளுமன்றத்தில் உறுதியான பெரும்பான்மையைப் பெறுவதும் அதன் மூலம் சபாநாயகரை மாற்றியமைப்பதுமே ஆகும். இதற்கான தொடர் நடவடிக்கைகள் சனாதிபதி சந்திரிகாவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கென சனாதிபதி சந்திரிகா ஒரு புறத்தில் அமைச்சுப் பதவிகளும், மறுபுறத்தில் அச்சுறுத்தல்கள் எனவும் இரு வழி முறைகளைக் கையாளத் தொடங்கினார். இதில் முதலாவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வீழ்த்தப்பட்டது. இதன் மூலம் பாராளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மை கிடைக்கப்பெற்றது.

அதன் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவுபட்டு நின்ற மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலாகாக்கள் அற்ற பிரதி அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டன. இவை சனாதிபதி சந்திரிகாவிற்கு பாராளுமன்றத்தில் மேலும் மூன்று அங்கத்தவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொடுத்தது.

ஆயினும் சனாதிபதி சந்திரிகாவின் பல நோக்குத் திட்டத்திற்கு இ.தொ.கா பாராளுமன்ற உறுப்பினரின் ஆதரவோ, முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக்குழு உறுப்பினர்களின் ஆதரவோ உறுதியாகக் கிட்டுமா? என்ற சந்தேகம் சனாதிபதி சந்திரிகாவிற்கு இருக்கவே செய்தது, அதிலும் குறிப்பாகச் சபாநாயகரை மாற்றுதல், பாராளுமன்ற அரசியல் நிர்ணய சபையாக மாற்றுதல், அரசியல் யாப்பு மாற்றம் போன்றவற்றிற்கு இவர்களின் ஆதரவை உறுதிப்படுத்த முடியாததாகவே இருந்தது.

இந்நிலையில் தான் ஜாதிகஹெல உறுமயவிற்குக் குழப்பத்தை உண்டுபண்ணவும், அதில் ஒரு பகுதியினரை ஆளும் கட்சிக்குள் இழுப்பதற்கும் சனாதிபதி சந்திரிகா தீவிர முயற்சிகளை மேற்கொண்டார். இதற்கு ஏற்கனவே ஜாதிகஹெல உறுமய பிக்குகள் அபிலாசை கொண்டிருந்த சபாநாயகர் பதவியைப் பேரமாக அவர் வைத்தார். ஆரம்பத்தில ஹெல உறுமயவிடம் இருந்து இதற்கு ஆதரவான சமிக்ஞைகள் வெளிப்பட்டதாயினும் இறுதியில் அது கைகூடாத நிலையே உருவாகியது.

இதன் காரணமாகவே சபாநாயகரை நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அரச தரப்பில் இருந்து வந்த அறிவிப்பு நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. ஆனால் சபாநாயகரை மாற்றுவது தொடர்பான செயற்பாட்டில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தளர்ச்சி காட்டமாட்டார் என்றே எதிர்பார்க்கலாம். ஏனெனில் அவரின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயம் செய்யப்படுவதற்கு இச்சபாநாயகர் பதவி ஆளும் கட்சியின் கைகளில் வந்தாக வேண்டியது அவசியமாகும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா இம்முயற்சியில் வெற்றி பெறுதல் என்பது சிறுபான்மையினரின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளுதல் என்பதன் அடிப்படையிலேயே சாத்தியப்பாடானதாகும். ஆனால் சனாதிபதி சந்திரிகா புதிய சபாநாயகரைத் தெரிவு செய்ய முற்படுவது என்பது சிறுபான்மைக் கட்சிகளுக்குப் பாதகமானதென்றொரு நிலை காணப்படுவதாகவே உள்ளது. இந்நிலையில் அவர்களினது ஆதரவைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது பொரும் பேரங்களுடனேயே சாந்தியப்படக்கூடியதாகும்

ஏனெனில் சனாதிபதி சந்திரிகா உருவாக்க முனையும் புதிய அரசியல் யாப்பானது சிறுபான்மையினரின் உரிமைகளுக்குக்- குறிப்பாக பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகும் என எதிர்பார்க்கப்படுவதால் சிறுபான்மையின் ஆதரவு சாத்தியமற்றதாகவே இருக்கும். இந்நிலையில் இதற்குப் பௌத்த சிங்கள அடிப்படை வாதிகளையே அவர் நம்பியிருக்க வேண்டி இருக்கும்.

ஆனால் எது சாத்தியமோ, சாத்தியமில்லையோ சனாதிபதி சந்திரிகா அரசியலில் தொடர்ந்து நீடிக்க விருப்பம் கொண்டுள்ளமையாலும், அவர் அரசியல் யாப்பு சனநாயக மரபுகள் யாவற்றையும் மீறி நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தக்கவர் என்பதனாலும் சபாநாயகரை மாற்றவோ புதிய அரசியல் யாப்பை உருவாக்கவோ அவர் எத்தகைய வழியையும் கையாளக் கூடும். ஆகையினால் சிறிலங்கா அரசியலில் பல புதிய நிகழ்வுகளை விரைவில் எதிர்பார்க்கத்தக்கதாகலாம்.

# கோப்ரல் ராஜபக்ஷ மீதான விசாரணை நாளைவரை ஒத்திவைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவி குமாரசாமி கிருஷாந்தியைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திக்கொலை செய்தமை தொடர்பில் குற்றவாளியாக இனம்கண்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட சிறிலங்காப் படைஅதிகாரி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ நேற்று யாழ் மேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

1996,1997ஆம் ஆண்டுகளில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போனோரில் 8பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்களின் மீதான விசாரணைகளுக்காக யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட ராஜபக்ஷ சார்பில் வாதிடுவதற்கு எந்த ஒரு வழக்கறிஞர்களும் முன்வராததைத் தொடர்ந்து இவ் ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணையை நீதவான் நாளைய தினத்திற்கு ஒத்திவைத்தார்.

எனினும் தன்தரப்பில் ஒரு வழக்கறிஞரை நியமிக்க இக்கால அவகாசம் போதாதுள்ளதாகவும் தனக்கு மேலும் கால அவகாசம் தேவை எனவும் கோப்ரல் ராஜபக்ஷ கோரியபோதும் அக்கோரிக்கையை முற்றாக நிராகரித்த நீதிபதி வரதராஜா ஏற்கனவே பல தடவை போதுமானளவு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள போதும ராஜபக்ஷ தனது தரப்பிற்கு இதுவரை ஒரு வழக்கறிஞரை நியமிக்காது காலம் தாழ்த்தி வருவதையும் சுட்டிக்காட்டியதுடன் எதிர்வரும் 5ஆம் திகதி வரை ராஜபக்ஷவை யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை இதுவரை காலமும் அனுராதபுர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ராஜபக்ஷ நேற்றுப் பூரண இராணுவ, பொலிஸ் பாதுகாப்புடன் யாழ்.மேல்நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார். (27)

# சனாதிபதியின் உத்தரவு காரணமாக என்னால் கருத்தெதுவும் கூறமுடியவில்லை

## -அமைச்சர் லால்காந்த தெரிவிப்பு

ஐ.ம.சு கூட்டமைப்பினுள் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக சனாதிபதி விடுத்துள்ள விசேட வேண்டுகோளினால் தமக்குக் கருத்துக்கள் எதனையும் வெளியிட முடியாதுள்ளதாக சிறிய மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற அகில இலங்கை போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் ஏழாவது வருடாந்த சம்மேளனத்தில் கலந்துகொண்டு உரையாற்றியவேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களையும் அதில் பேசப்படுகின்ற விடயங்களையும் ஊடகங்களுக்கு எந்தவோர் அமைச்சரும் வெளிப்படுத்தக்கூடாதென சனாதிபதி நேற்று முன்தினம் கட்டளையிட்டுள்ளார். இதனால் நான் அரச விடயங்களைக் கூடுதலாகக் கதைக்க மாட்டேன் என மேலும் தெரிவித்துள்ளார். அத்துடன் எமது கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையில் அவருக்கு நாங்கள் மரியாதை செலுத்தவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இந்நாட்டில் எவ்வளவோ கூட்டமைப்புக்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். இவையனைத்தும் நிரந்தரமான கூட்டமைப்புக்களா? நாம் அவ்வாறு எண்ணவில்லை. இது நிரந்தரமாக இருக்கப்போவதில்லை. இக்கூட்டமைப்பைப் பாதுகாக்க வேண்டும் என்று நாம் யாரும் இவ்வாறு நினைக்க வேண்டுமா? நாட்டில் செய்ய வேண்டிய சில பணிகள் இருக்கின்றன. அப்பணிகள் நிறைவேற்றப்படாது விட்டால் கூட்டமைப்பால் பலன் இல்லையெனத் தெரிவித்துள்ளார்.

# தற்போதைய முரண்பாடு குறித்து ஜே.வி.பியுடன் கடிதப்பரிமாற்றமில்லை

## ——பிரதி அமைச்சர்களின் கூட்டமை[illegible]பு முடிவு

தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஜே.வி.பியுடன் கடிதப் பரிமாற்றங்களை இனிமேலும் மேற்கொள்ளாதிருக்க பிரதியமைச்சர்களின் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

இனி வரும் காலங்களில் இப்பிரச்சினை தொடர்பாக ஐ.ம.சு கூட்டமைப்பின் தலைமையுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக பிரதியமைச்சர்கள் கூட்டமைப்பின் தலைவர் டிலான் பெரேரா [illegible]வித்துள்ளார். தொலைக்கா[illegible] ஒன்றிற்கு வழங்கிய செ[illegible]யில் அவர் மேற்கண்டவா[illegible]றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் திகதியை நிர்ணயிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையளருக்கே உண்டு

## முன்னாள் சபாநாயகர் தெரிவிப்பு

சிறிலங்கா யாப்புச் சட்ட விதிமுறைகளின் படி அடுத்த சனாதிபதித் தேர்தலுக்கு நாட்களைக் குறிப்பிடும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு மாத்திரமே உண்டு,சனாதிபதிக்கோ அல்லது மங்கள சமரவீரவுக்கோ அந்த அதிகாரங்கள் கிடையாது என முன்னைய சபாநாயகரும் ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் மைக்கல் கடந்த மாதம் 31ஆம் திகதி கம்பகாவில் நடந்த ஐக்கிய தேசிய கட்சி பொதுக் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்

# மு.கா. வை பிளவுபடுத்த முயலும் சக்திகளுக்கு எதிராகப் போராட்டம்

## ——மு.கா.தலைவர் ஹக்கீம் அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசை பிளவுபடுத்தும் தீய சக்திகளுக்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. சதி நடவடிக்கைகளில் ஈடுபட்ட முஸ்லிம் காங்கிரசிற்கு எதிராகச் செயற்படும் இத் தீய சக்தி களுக்கு எதிராக ஐந்து இலட்சம் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் களைத் திரட்டிக் கொண்டு வந்து போராட்டம் நடத்தப்போவதாக அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

## -அதிகரித்த சம்பளம் வழங்கப்படவில்லை-

# வடகிழக்கு சுகாதார ஊழியர்கள் அரசுக்கு எதிராகப் போராட்டம்

வடகிழக்கு சுகாதார ஊழியர்களுக்கு அரசாங்கத்தால் அதிகரிக்கப்பட்ட சம்பளம் இதுவரை வழங்காதபடியால் அச் சம்பளத்தை மீண்டும் வழங்குமாறு கோரி வடகிழக்கு சுகாதார ஊழியர் சங்கம் மாபெரும் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அதன் செயலாளர் அறிவித்துள்ளார். வடகிழக்கு சுகாதார ஊழியர்களின் அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வை வழங்குவதற்கு பிரத மர் வடகிழக்கு ஆளுனருக்கு அறிவித்தும் அவர் இதுவரை இந்த ஊழியர்களுக்கு சம்பளம் வழங்காதபடியால் இந்த எதிர்ப்புப் போராட்டம் வெகு விரைவில் மேற்கொள்ளப்படும் என சுகாதார ஊழியர் சங்கம் அரசுக்கு அறிவிததுள்ளது.

# பெண்கள் மீதான வன்முறை ஒழிப்பு கிளிநொச்சியில் பிரச்சாரத் திட்டம்

(அலுவலக செய்தியாளர்)

பெண்கள் மீதான வன்முறைகளை இல்லாதொழிக்க இலங்கை பிரச்சாரத் திட்டம் 2004 என்ற தலைப்பிலான பிரச்சாரம் கிளிநொச்சிப் பிரதேசத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக நகரப் பகுதி எங்கும் "குடும்ப வன்முறைகளைக் குறைப்பதற்கு நாம் ஒன்றிணைவோம்" என்ற தலைப்பிலும், "இல்ரத்து வன்முறைகளை இல்லாது ஒழிக்க ஒன்றிணைவோம்" என்ற தலைப்பிலான பதாதைகள் பல இடங்களிலும் கட்டப்பட்டுள்ளன.

அத்தோடு இப் பிரச்சாரத் திட்டத்தில் நேற்று ஒலிபெருக்கி மூலம் மேற்படி கோசங்கள் பிரச்சாரம் செய்யப்பட்டன. இப் பிரச்சார நடவடிக்கையினை கிளிநொச்சி பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனமும், ஒக்ஸ்பாம் நிறுவனமும் இணைந்து நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு.தீ)

## தமிழீழ மீட்பு நிதிச் சான்றிதழ் தவறவிட்டோர் கருத்திற்கு தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளல்– கார்த்திகை 2004

தமிழீழ மீட்பு நிதிக்கடன் சான்றிதழைத் தவறவிட்டோர், 2004 ஆம் ஆண்டிற்கான மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலில் தனது பெயர் தெரிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடையாள ஆவணத்துடன் கீழ்க்காணும் நேர அட்டவணைக்கிணங்க வருகை தந்து 2004 ஆம் ஆண்டிற்கான மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலைப் பார்வையிட்டுத் தமது தெரிவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| **06.11.2004 (சனி)** | | | | |
| அரசியல்துறைச் செயலகம் - | மானிப்பாய் | காலை | -08.30-10.00 | மணி |
| அரசியல்துறைச் செயலகம் - | சண்டிலிப்பாய் | மு.ப | -10.30-12.00 | மணி |
| அரசியல்துறைச் செயலகம் | சுன்னாகம் | பி.ப | -12.30-02.00 | மணி |
| அரசியல்துறைச் செயலகம் - | நீர்வேலி | பி.ப | -03.30-04.30 | மணி |
| **07.11.2004 (ஞாயிறு)** | | | | |
| அரசியல்துறைச் செயலகம் - | வல்வெட்டித்துறை | காலை | -08.30-10.00 | மணி |
| அரசியல்துறைச் செயலகம் - | 2ஆம் குறுக்கு பருத்தித்துறை | மு.ப | -10.30-12.00 | மணி |
| அரசியல்துறைச் செயலகம் - | வதிரி | பி.ப | -01.00-02.00 | மணி |
| அரசியல்துறைச் செயலகம் - | வடமராட்சி கிழக்கு | பி.ப | -03.00-03.30 | மணி |
| **08.11.2004 (திங்கள்)** | | | | |
| அரசியல்துறைச் செயலகம் - | கைதடி | காலை | -08.30-09.30 | மணி |
| அரசியல்துறைச் செயலகம் - | சங்கத்தானை | மு.ப | -10.30-12.00 | மணி |
| அரசியல்துறைச் செயலகம் - | நல்லூர் | பி.ப | -03.30-04.30 | மணி |
| **09.11.2004 (செவ்வாய்)** | | | | |
| அரசியல்துறைச் செயலகம் - | வேலணை | காலை | -08.30-09.00 | மணி |
| வீரசிங்கம் மண்டபம் - | யாழ்ப்பாணம் | மு.ப | -11.30-01.00 | மணி |
| **10.11.2004 (புதன்)** | | | | |
| மத்திய கல்லூரி - | கிளிநொச்சி | பி.ப | -2.4-5.4.00 | மணி |

## சாவு அறிவித்தல்

### திருமதி கனகநாதன் தவயோகலட்சுமி

**நயினாதீவைப் பிறப்பிடமாகவும், பரந்தன் குமரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவயோகலட்சுமி கனகநாதன் அவர்கள் 03.11.2004 புதன்கிழமை இரவு காலமானார்.**

அன்னார் காலஞ்சென்ற அரசநில அளவைப்படவரைபாளர் நல்லதம்பி கனகநாதன் அவர்களின் அன்புத் துணைவியும் மாவீரர் (மேஜர்சந்திரன்), பிரகாஷ் (மருத்துவக்கல்லூரி மாணவன்) பிரகாமி (M.SC Computer Science) இலண்டன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கோபாலசுந்தரம் றமேசன் (பொறியியலாளர் இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், பரந்தன் விஜயலட்சுமி கபே உரிமையாளர் திரு.பொ.சுப்பிரமணியம், திருமதி பராசக்தி (இத்தாலி) ஆகியோரின் மூத்த மகளும், காலஞ்சென்ற கொழும்பு பிரபல வர்த்தகர் V.P.நல்லதம்பி நாகமுத்து தம்பதிகளின் மருமகளுமாவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.11.2004 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4மணிக்கு பரந்தனில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பரந்தன் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

தகவல்:-

*134,குமரபுரம்,*
*பரந்தன்.*

**திருமதி பிரகாமி றமேசன் (மகள்)**

### படையினர்...

குவிந்ததையடுத்து பரபரப்பான சூழல் அங்கு நிலவியது.

இதனிடையே தகவல் கிடைத்து அப்பகுதிக்கு விரைந்த யாழ். பொலிஸ் நிலைய உயரதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டனர். சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர் ஒருவரையும் விசாரணைக்கென பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். (32)

### தேசியத்....

பொறுப்பாளர் செம்மணனிடம் கையளித்தார். அதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியத்தலைவர் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கென ஒரு தொகைப் பணத்தை அதிபர் அவர்கள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணனிடம் கையளித்தார். அதனைத் தொடர்ந்து நன்றி உரையை உதவி அதிபர் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர். (36)

### சிறிலங்கா...

வடக்கு கிழக்கு பிரச்சினையும் இம் மாநாட்டில் பாரிய பிரச்சினையாக எடுத்துக்கொள்ளப் பட்டது. இந் நிலையில் புலிகள் ஆயுதங்களைக்கீழே வைத்துவிட்டு பேச்சுவார்த்தைக்கு வரவேண்டுமெனப் பல பிரதிநிதிகளும் தெரிவித்துள்ளனர். இதன்போது கருத்து வெளியிட்ட மலையக மக்கள் முன்னணியினர் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியதற்கான காரணங்களையும் இலங்கையின் அரசாங்கம் நடைமுறைச் சமாதான நிலைமையிலும் கூட தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கையில்ஈடுபட்டுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளமை, இதே வேளை இலங்கையில் மலையக சமுதாயம் எதிர்கொள்கின்ற பிரச்சினையை எடுத்துக் கூறியுள்ளனர்.

## கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் வீரவணக்கக் கூட்டமும் நினைவுக்கல் திரை நீக்கமும்

கடந்த *28.08.1998* அன்று யாழ் மாவட்டம் இருபாலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது வீரச் சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்

* கப்டன் மாதவன் (கனகராசா சுமித்திரன். யாழ். மாவட்டம்) இம்மாவீரரது திருவுருவப்படம் நேற்று முன்தினம் மாலை 4.00 மணியளவில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்ல மாவீரர் நினைவு மண்டபத்தில் வைக்கப்பட்டு நீர்வேலிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சங்கர் தலைமையில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது. முதலில் மாவீரரது திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை தாயார் ஏற்றிவைத்தார். சகோதரி மலர் மாலையினை அணிவித்தார். நினைவுரையினை யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் கலைவிழி ஆற்றினார். பிற்பகல் 5.00 மணிக்கு நினைவுக்கல்லினை பெற்றோர் திரை நீக்கம்செய்து வைத்தனர். இந்நிகழ்வில் போரா ளிகளும், பொதுமக்களும் கலந்து கொண்டனர். (27)

## 'நிழல்' சமூக பொருளாதார அபிவிருத்தி 2ஆவது இதழ் வெளிவருகிறது

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வெளியீடான 'நிழல்' சமூக பொருளாதார அபிவிருத்தி இதழ் இன்று வெளிவருகின்றது. தமிழீழ தேசியத்தலைவரின் சிந்தனையைத் தாங்கி வெளிவருகின்ற இவ்விதழில் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளின் பேராதரவுடன் வறிய மக்கள் உயிர்க்காப்புச் சிகிச்சை உதவித்திட்டம் பல இலட்சம் ரூபா செலவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் முன்னெடுப்பு என்ற பிரதான தலைப்புச் செய்தியுடன் சுவிஸ், கனடா, நோர்வே, அமெரிக்கா தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆதரவுடன் கிளிநொச்சியில் ஆங்கில மொழிக்கல்லூரி, கணினியியல் கல்லூரி, முகாமைத்துவக் கல்லூரி என்பன திறப்பு உட்படப் பல முக்கிய செய்திகளுடன் பு.சத்தியமூர்த்தி எழுதிய பீணிக்காய் எழுகிறது தட்டுவான்கொட்டி என்ற கிராம தரிசனம் கட்டுரை, லண்டன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த சரவணமுத்து இராஜகோபால் அவர்களுடனான நேர்முகம், வடக்கு கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களும் புனர்வாழ்வும் என்ற கட்டுரையும், டெங்குவில் இருந்து மீள்வோம், கிளிநொச்சியில் மீண்டும் நிமிரும் வாழ்விடங்கள், மு.க.சிவபாதம் எழுதிய கல்வி பயிற்சி சார் நுண்கடன் திட்டம், அ.சுமன் எழுதிய கணினியில் ஓர்துளி, தமிழ் அருவி எழுதிய ஒளி தெரிகிறது சிறுகதை, வணபிதா ச.எ.றெஜினோல்ட் அவர்களுடனான உளவளம் செவ்வி, சிகரம் என்ன சின்னப் புள்ளியா என்ற ஜெயந்திரன் எழுதிய விளையாட்டுக் கட்டுரை உட்படப் பல்வேறு விடயங்களைத் தாங்கி நிழலின் 2ஆவது இதழ் வெளிவருகின்றது.

### இரணைமடு...

காக அனுப்பி வைத்துள்ளனர். மேலதிக விசாரணைகளை தமிழீழ காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (கு,தீ)

## யாழ்.இற்கு இரகசியப் பயணம்

வடக்கு கிழக்கு மாகாண ஆளுனர் அசோக ஜெயவர்த்தனா நேற்று யாழ்.குடாநாட்டிற்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாகவே இவ் இரகசிய விஜயத்தை அவர் மேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இவ் விஜயத்தின் போது யாழ்.மாவட்ட படைத்தளபதி சுனில் தென்னக்கோன் உட்பட்ட படை அதிகாரிகளைச் சந்தித்துள்ளனர். (33,27)

### அரசியல்....

நோக்கில்புலிகளுக்கும்- அரசிற்குமிடையே ஏற்படவேண்டிய இணக்கம் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. (32)

## 03 ஆம் ஆண்டு நினைவில்

பிறப்பு 01 . 06 . 1982

வீரச்சாவு 04 . 11 . 2001



### லெப்.தென்றல்

சிவநாதன் சர்வலோஜினி (சர்மி)

அளவெட்டி வடக்கு, அளவெட்டி யாழ்

மூன்றாண்டு மூன்று நொடிகளாய்கரைந்து விட்ட போதிலும் சர்மியம்மா
மூச்சுள்ள வரை மூங்கிலாய் உயர்ந்து நிற்கிதம்மா – உன் நினைவு
உனைப்பிரிந்து மூன்றாண்டா? ஏற்க மறுக்குதம்மா நெஞ்சம்
மனத்திரையிலே சர்வம் ஆளுகின்ற சர்வலோஜினியே
உன் சிரித்தமுகம் என்றென்றும் எம் கண்களுக்குள் நிலைத்து நிற்குதம்மா
தமிழினம் காக்கவென தென்றலே – நீ ஒருகணம்
புயலாக வீசியதனாலே நாம் புரியாது கலங்குகிறோம்
என்றும் உன்பிரிவால் துயருறும். உறவுகள்.

தகவல்:-
குடும்பத்தினர்

(5056)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.